விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

வடமாகாணத்தின் மிகப்பெரிய கல்விக்கண்காட்சி
ESU
ESOFT UNI JAFFNA
2026 ஜனவரி மாதம்
31ST 1ST
E2 மற்றும் E4 இல்
இடம் வலம்புரி ஹோட்டல்
(C-4912)

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 043 வள்ளுவர் ஆண்டு 2057 தை 17 சனிக்கிழமை (31.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# யாழ்.நகரை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

### மாவட்ட அரச அதிபர் பிரதீபன்



(யாழ்ப்பாணம்)

நடப்பு ஆண்டு யாழ்ப்பாண நகரை அழகுடையதாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

### சங்கானையில் அமைந்துள்ள
## இராணுவ முகாமை அகற்றுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சங்கானையில் அமைந்துள்ள இராணுவ முகாமினை அகற்றிவிட்டு அந்தக் காணியை மக்களிடம்

15ஆம் பக்கம் பார்க்க

### திருகோணமலை
## புத்தர் சிலை வழக்கின் தீர்ப்பு மீண்டும் ஒத்திவைப்பு

(திருகோணமலை)

திருகோணமலை நகரின் மையப்பகுதியில் நீதிமன்ற உத்தரவை மீறி அமைக்கப்பட்டதாகக் கூறப்படும் புத் தர்

15ஆம் பக்கம் பார்க்க

### பயங்கரவாதச் சட்டத்தில்
# கைதானவர்களுக்கு நிவாரணம் இல்லை

### நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார



(கொழும்பு)

பயங்கரவாதச் சட்டத்தில் கைதானவர்களுக்கு எவ்விதமான நிவாரணமும் வழங்கப்படாது என நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## கல்வி மறுசீரமைப்பு நிபுணர்கள் குழுவில்
### யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் சிறீசற்குணராஜா

(யாழ்ப்பாணம்)

கல்வி மறுசீரமைப்புக் குழுவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

15ஆம் பக்கம் பார்க்க

### தோட்டத் தொழிலாளர்களுக்கு
## சம்பளம் அதிகரிப்பு ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 1750 ரூபாயாக அதிகரிப்பது தொடர்பான ஒப்பந்தம்

15ஆம் பக்கம் பார்க்க

## திடீர் பணக்காரர்களின் தகவல்களைத் தரவா?
### வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் கேள்வி எழுப்பிய பவானந்தராஜா

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கில் திடீர் பணக்காரர்கள் எல்லாம் இருக்கின்றார்கள். எங்களுக்குத் தெரியும். உங்களுக்கு

15ஆம் பக்கம் பார்க்க

## நெல்லியடி, மானிப்பாய், முல்லை நகர்
### புதிய நகர அபிவிருத்தியில் முதற்கட்டமாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி, மானிப்பாய், முல்லைத்தீவு நகரம் என்பன புதிய நகர அபிவிருத்தித் திட்டத்தில் முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன என பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன் முகநூல் பதிவொன்றினூடாக தெரிவித்துள்ளார்.

குறித்த பதிவில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் புதிய நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக நாடு முழுவதும் 20 நகரங்களை நவீனமயமாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில்

02ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாத சட்டத்துக்கு எதிராகப் போராட்டம்



(கொழும்பு)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பயங்கரவாத

02ஆம் பக்கம் பார்க்க

## கணக்காய்வாளர் பதவிக்கு மற்றுமொரு பெயர் பரிந்துரை

(கொழும்பு)

தற்போது வெற்றிடமாக உள்ள கணக்காய்வாளர் நாயகம் பதவிக்காக ஜனாதிபதி

02ஆம் பக்கம் பார்க்க

### உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள
## பட்டதாரிகளை கலந்துரையாட வருமாறு ஜனாதிபதி அழைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளை கலந்துரையாட வருமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

அதற்கமைய குறித்த

02ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நடக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கைதானவர்களுக்கு...

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் கொண்டுவரப்பட்டாலும், நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு, எந்தவித நிவாரணமும் வழங்கப்படாது.

எனினும், நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து, இதுவரை வழக்கு தாக்கல் செய்யப்படாதவர்களின் தகவல்கள் இருந்தால் அது குறித்து ஆராய்வதாகவும் நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்தார்.

அதற்கமைய புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் குறித்து பொது மக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் எனப் பலதரப்பட்ட தரப்புகளும் தங்களுடைய கருத்துகள் மற்றும் யோசனைகளை முன்வைத்து வருகின்றனர்.

இந்த நிலையில் எதிர்வரும் பெப்ரவரி 28 ஆம் திகதி வரை இதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார்.

அதற்கு பின்னர் சட்டவரைபு குழுவை கூட்டி, அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதனிடையே, நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் வழக்கு விசாரணைகளின் கீழ் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். (ம-7)

## யாழ். நகரை...

யாழ்ப்பாண நகர அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பதற்கான பங்குதாரர்களின் கருத்துக்களை கேட்டறிந்து கொள்வதற்கான பங்குதாரர் ஆலோசனைக் கூட்டம் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அவர்களின் தலைமையில் நேற்று மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர், நகர அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிப்பதற்கான கலந்துரையாடல் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க அவர்கள் தலைமையில் கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கருணநாதன் இளங்குமரன் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் கடந்தாண்டு இறுதியில் நடாத்தப்பட்டது,

அக் கலந்துரையாடலில் தாமும் கலந்து கொண்டதாகவும், இதில் இலங்கையில் 10 நகரங்களையும் அபிவிருத்தி செய்வதற்காக இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தில் 2000 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், வடக்கு மாகாணத்தில் இத் திட்டத்திற்காக யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா நகரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும், நகரங்கள் அபிவிருத்தி செய்வதற்கான நடைமுறைகள் தொடர்பில் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது என அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

இதன்போது யாழ்ப்பாண மாவட்டம் சார்ந்த துறை சார்ந்த திணைக்கள அதிகாரிகள், அரசியல் பிரதிநிதிகள், சமூக மட்ட பிரதிநிதிகள் ஆகியோருக்கு இத் திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தி ஆலோசனைகளை பெறவேண்டிய தேவைப்பாட்டினை தாம் கூட்டத்தில் தெரிவித்திருந்தாகவும்,

அதனடிப்படையில் தொடர்புடைய பங்குதாரர்களின் கருத்துக்களை கேட்டறியும் நோக்கிலும், இச் செயற்றிட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியை முன்னுரிமை வழங்கவேண்டிய திட்டங்களை அடையாளம் கண்டு திறம்பட பயன்படுத்துவது தொடர்பில் ஆராயும் நோக்கத்துடன் இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். மேலும், இங்கு நிறுவனம் சமூகம் சார்ந்து கருத்துக்கள் பரிமாறுவது ஆரோக்கியமாக அமையும் எனவும்,

குறித்த கலந்துரையாடலில் நகரத்தின் வடிகாலமைப்பு குறித்து தெளிவுபடுத்தியிருந்ததாகவும் தெரிவித்ததுடன், நகர அமைப்பு, போக்குவரத்து நெரிசல், வாகன பாதுகாப்பு உள்ளடங்கலாக நகர அமைப்பு சரிவர பேணப்படவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். மேலும், நாமும் அதனை கண்கூடாகப் பார்க்கிறோம் எனவும்,

யாழ். நகரம் அழகுடையதாக ஆரோக்கியமானதாக அமைவதுடன், அதனை தனித்துவ அடையாளமாக மாற்றியமைக்கும் தேவைப்பாடு அனைவருக்கும் இருக்கிறது எனவும், எனவே அது குறித்து ஆலோசனைகளை தெரிவிக்க வேண்டும் எனவும், இங்கு பெறப்பட்ட கருத்துக்கள் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களை வடிவமைப்பதற்கு பயன்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து யாழ்ப்பாண நகர அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பதற்காக பங்குதாரர்களின் கருத்துக்கள் கேட்டறியப்பட்டன. இதன் போது கலந்து கொண்டிருந்தவர்கள் யாழ். நகர அபிவிருத்தி தொடர்பான திட்ட முன்மொழிவுகளுடன் தங்கள் கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை முன்வைத்தனர்.

இக் கலந்துரையாடலில் மாநகர சபையின் முதல்வர், நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடமாகாணப் பணிப்பாளர், யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர், மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி), மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஆணையாளர், மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவரின் இணைப்பாளர், யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலாளர்கள், துறைசார்ந்த பல்வேறு திணைக்களங்களின் அதிகாரிகள், வர்த்தக சங்கத்தினர், பிரதிநிதிகள் என உள்ளிட்ட தரப்பினரும் கலந்து கொண்டனர். (ம-7)



யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாச்சார மையத்தில் மாபெரும் கல்விக் கண்காட்சி நேற்று ஆரம்பமான நிலையில் பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள் எனப் பலரும் ஆர்வமுடன் கலந்து கொண்டிருந்தனர்.

இதில் தொழில்துறை வழிகாட்டல் கருத்தமர்வுகள், உயர் கல்வி சம்பந்தமான நெறியூட்டல்கள் உள்ளடங்கலாக உணவுத் திருவிழா, ஆடல், பாடல், சதுரங்கப் போட்டி உள்ளிட்ட பல சிறப்பம்சங்கள் இடம் பெற்றிருந்தன. இந்தக் கண்காட்சி இன்றும் (31) சனிக்கிழமையும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பயங்கரவாத...

எதிர்ப்புச் சட்டம் (PSTA) ஆகிய வற்றை உடனடியாக மீளப் பெறக் கோரி நீதி அமைச்சிற்கு முன்பாக நேற்று பாரிய கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சிவில் அமைப்புகள், பல்வேறு மதங்களைச் சேர்ந்த மதத் தலைவர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் எனப் பலரும் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். (ம-7)

## பட்டதாரிகளை...

கலந்துரையாடல் அடுத்த செவ்வாய்க்கிழமை (3) மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலைகளில் பயிற்சி பெற்ற குறித்த பட்டதாரிகள் தங்கள் சேவைகளை நிரந்தரமாக்கக்கோரி ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## நெல்லியடி...

நெல்லியடி மற்றும் மானிப்பாய் ஆகிய இரு நகரங்கள் முதற்கட்ட அபிவிருத்திக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன. நீண்டகாலமாக அபிவிருத்தித் தேவைகளைக் கொண்டுள்ள இவ்விரு நகரங்களும், மிக விரைவில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்தப்படவுள்ளன.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு நகரம் இந்த விசேட திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. யுத்தத்திற்குப் பின்னரான மீளெழுச்சியில் இந்த நகரின் வர்த்தக மற்றும் நிர்வாகக் கட்டமைப்புகளை வலுப்படுத்துவது அவசியமாகக் கருதப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## கணக்காய்வாளர்...

அநுர குமார திஸாநாயக்கவினால் மற்றுமொரு பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இன்று அரசியலமைப்பு சபை கூடவுள்ளதுடன், இதன்போது இது தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம-7)


தைப்பூஷ அன்னதானம்

01.02.2026 அன்றைய நன்நாளில் நயினாதீவு அலைகடல் நடுவிலிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் நாகபூஷணி தாயவளை காணவரும் அடியார்கள் அனைவர்க்கும் அள்ள அள்ளக் குறையாத பிரதான சாலை வீதியில் அமைந்துள்ள அமுதசுரபி அன்னதான சபையில் அன்னம் வழமை போன்று வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதனை மன மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ஸ்ரீ நாகபூஷணி
அமுதசுரபி அன்னதான சபை
நிர்வாகம்.

2 ம் வட்டாரம் (C-4913) தொ. இல. : 021 7147 200

கம்சப்பிரியா இசைக் கல்லூரி

இல. 30 கிருஸ்ணபிள்ளை வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

தைப்பூச நாள் வகுப்புக்கள் ஆரம்பம்
ஓர்கன், வயலின், வீணை, கிற்றார்,
புல்லாங்குழல், வாய்ப்பாட்டு.
மாலை 4.00 மணிக்கு நடைபெறும்.
வகுப்பில் இணைய விரும்புபவர்கள் நேரில் சமூகமளிக்கவும்.
077 481 9795 (6709)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகளுடன் 31 நாட்களும்

# அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 02.01.2026 வெள்ளிக்கிழமை அன்று
இறையடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம்

## அமரர். தம்பன் இரத்தினசிங்கம்

(மெக்கானிக் சித்தப்பா)

இரும்பைத் தொட்டால் இதயமாக்கும்,
மாயம் தெரிந்த மந்திரக் கைகள்!

இயந்திரம் அழுதால் உயிர் கொடுப்பார்,
எங்கள் தெய்வத்தின் வியர்வைத் துளிகள்!

உடைந்ததை எல்லாம் ஒட்ட வைத்தார்,
பழுதானதை எல்லாம் சரி செய்தார்!

காலம் எனும் இயந்திரம் செய்த சதியால்,
இன்று அவரே மௌனமாகிப் போனார்!

எண்ணெய் வாசம் வீசும் சட்டை,
இனி எங்கே நான் காண்பேன்!

சுத்தியல் சத்தம் கேட்ட திசையில்,
வெறிச்சோடிய கூடம் மட்டும் மிச்சம்!

மற்றவர் வாழ்வைச் சீரமைத்தவர்,
தன் மூச்சை மட்டும் ஏனோ நிறுத்திக் கொண்டார்!

மீண்டும் ஒருமுறை அவர் குரல் கேட்க,
எந்தக் கருவியால் முடியும் தெய்வமே!

எங்கள் தெய்வம் திடீர் சுகயீனம் உற்ற நிலையில் பிரபல தனியார் வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு, 2 சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில் சிகிச்சை பலனின்றி இறையடி சேர்ந்தார்.
எங்கள் இமயம் சரிந்த ஆறாத துயரிற்கு நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் முகநூலூடாகவும் ஆறுதல் வழங்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றிகள்.

அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் 31.01.2026 இன்று சனிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு கீரிமலை புனித தீர்த்த கரையிலும் அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு சபண்டீகரண நிகழ்வும் அவரது இல்லத்தில் நடைபெறும் . அனைவரும் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(6646)

**மலர்வு** 29.10.1947

**உதிர்வு** 02.01.2026

நாவற்காடு,
அச்சுவேலி.

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## சர்வதேச கராத்தே மற்றும் சிலம்பம் போட்டிகளில்

# இலங்கை தங்க வேட்டை!


**சர்வதேச ரீதியிலான கராத்தே மற்றும் சிலம்பம் போட்டிகளில் இலங்கையின் வடமாகாணத்தைச் சேர்ந்த பாபு இஷின்ரியூ கராத்தே பாடசாலை வீர, வீராங்கனைகள் 26 தங்க கோப்பைகள் மற்றும் 4 வெள்ளிக் கோப்பைகள் என்பவற்றை வென்று சாதனை படைத்துள்ளனர்.**



சர்வதேச ரீதியிலான கராத்தே மற்றும் சிலம்பம் போட்டிகள் கடந்த 24 மற்றும் 25 ஆம் திகதி களில் இந்தியாவில் நடைபெற் றது.

இப் போட்டிகளில் இந்தியா, இலங்கை, மலேசியா, டுபாய், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளி லிருந்து 1500இற்கும் அதிகமான மாணவர்கள் பங்குபற்றியிருந்த நிலையில் இலங்கையிலிருந்து சிவலீமன் சிலம்பம் தற்காப்பு கலை மன்றம் மற்றும் பாபு இஷின்ரியூ கராத்தே பாடசாலை ஆகியவற்றி லிருந்து சூசைநாதர் யசோதரன் தலைமையில் 5 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

அந்த வகையில் பங்குபற்றிய மாணவர்களில் யசோதரன் தனு ஷன் 7 தங்கக்கோப்பைகளையும், பஸ்ரியன் றயீவ் 5 தங்கக்கோப்பை களையும், ரவீந்திரன் டிலக்சினி 3 தங்கக் கோப்பைகளையும் 1 வெள்ளிக் கோப்பையையும், வினோதன் பகலவன் 6 தங்கக் கோப்பைகளையும் 1 வெள்ளிக் கோப்பையையும் மற்றும் சற் குணராஜா பிரவீன் 5 தங்கக் கோப்பைகளையும் 2 வெள்ளிக் கோப்பைகளையும் வென்று சாதனை படைத்துள்ளனர். இதன் மூலம் இலங்கை மொத்தமாக 26 தங்கக் கோப்பைகளையும் மற்றும் 4 வெள்ளிக் கோப்பைகளையும் பெற்று கழகத்திற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளனர். (3)




## முதலாவது ரி–20 போட்டி

# அவுஸ்திரேலியாவை வீழ்த்தி பாகிஸ்தான் அபாரம்

பாகிஸ்தான் மற்றும் அவுஸ் திரேலியா அணிகளுக்கிடை யிலான 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் இடம்பெற்று வரு கிறது.

இதில் இரு அணிகளுக்கு இடையேயான முதல் ரி-20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.


இதில் முதலில் துடுப்பெடுத் தாடிய பாகிஸ்தான் 20 ஓவர் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 168 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக சைம் அயூப் 40 ஓட்டங்கள் எடுத்தார். அவுஸ் திரேலியா தரப்பில் ஆடம் ஜாம்பா 4 விக்கெட்டுகளை கைப்பற்றி னார்.

இதனையடுத்து களமிறங்கிய அவுஸ்திரேலியா அணி சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை பறிகொடுத்தனர். இதனால் அவுஸ்திரேலியா அணி 20 ஓவர் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 146 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதன் மூலம் 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் வெற்றி பெற்றது. அதிகபட்சமாக கேமரூன் கிரீன் 36 ஓட்டங்கள் எடுத்தார். பாகிஸ்தான் தரப்பில் சைம் அயூப், அப்ரார் அகமது ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

இதனால் 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் பாகிஸ் தான் 1-0 என்ற கணக்கில் முன் னிலையில் உள்ளது. இரு அணிகள் மோதும் 2ஆவது ரி-20 போட்டி இன்று நடைபெறவுள் ளது. (3)



வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் வீதி ஓட்ட நிகழ்வானது நேற்றைய தினம் இடம்பெற்றது.

கல்லூரியின் முதல்வர் சி. தனஞ்சயன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். உடற்கல்வி ஆசிரியர் சங்க தலைவர் கலந்து சிறப்பித்திருந்தார். தொடர்ந்து வெற்றியீட்டிய வீர-வீராங்கனைகளுக்கான மற்றும் போட்டியை முழுமையாக நிறைவு செய்த மாணவர்களுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன. (படங்கள் : கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேங்காய் எண்ணெய் விலை அதிகரிக்கும் அபாயம்!

## நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கம்

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் சந்தையில் தேங்காய் எண்ணெய் விலை அதிகரிக்கக்கூடும் என நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பத ற்கான தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

தேங்காய் எண்ணெய் மற்றும் பாம் எண்ணெய் ஆகியவற்றின் மீது நிலவும் விசேட வரியை நீக்குவதற்கு அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனை காரணமாக, தேங்காய் எண்ணெயுடன் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் எண்ணெய் வகைகளைக் கலந்து சந்தைக்குக் கொண்டுவரும் அபாய நிலை ஏற்படுவதுடன் உள்ளூர் தேங்காய் எண்ணெயின் விலையும் அதிகரிக்கலாம்.

அத்துடன் ஏனைய எண்ணெய் வகைகள் சந்தையில் அதிகமாகப் புழக்கத்திற்கு வரும் எனவும் தெரிவித்தார்.

மேலும், தென்னை சார்ந்த உற்பத்தியை ஏற்றுமதி செய்பவர்கள், உள்ளூர் சந்தைக்குத் தேவையான தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கான தேங்காயை வெளிநாட்டு ஏற்றுமதிக்குப் பயன்படுத்துவதால், உள்நாட்டுச் சந்தையில் தேங்காய் எண் ணெய் தட்டுப்பாடு ஏற்படும் எனவும், அதன் மூலம் நுகர்வோர் பாம் எண் ணெய் மற்றும் ஏனைய எண்ணெய் வகைகளை நுகர்வதற்குத் தள்ளப்படும் நிலை ஏற்படும் எனவும் ரஞ்சித் விதானகே மேலும் தெரிவித்தார். (8)

# 'முழுமதிக் கருத்தாடல்' நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொதுசன நூலக வாசகர் வட்டத்தினரால் 'முழுமதிக் கருத்தாடல்' நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு தொடர் நிகழ்வாக நடைபெற உள்ளது.

இந்நிகழ்வின் முதல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிறபகல் 4 மணிக்கு பொதுநூலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் 'கருத்தாடல் 1 - நவீன நோக்கில் ஈழத்து இலக்கியங்களின் மாற்றப் பாதை' என்ற தலைப்பில் நிகழ்வு இடம்பெறும்.

இந்நிகழ்வில் இலக்கிய ஆர்வலர்கள், வாசகர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் பங்குபற்றிப் பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொள்கிறார்கள். (8)

# UNIVERSITY OF JAFFNA INVITATION FOR BIDS

**Supply of Skilled, Semiskilled and Unskilled Workers to the University of Jaffna -2026/2027**

1. The Chairman, Procurement Committee, University of Jaffna invites sealed Bids for the above contract up to 2.00 p.m. on **23rd February 2026**.
2. Period of contract should be 365/6 days subject to a performance evaluation period of 60 days.
3. Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidences Should be provided with Bids.
   - 3.1 Must be registered in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance.
   - 3.2 Average of annual volume of supply of skilled, semiskilled and unskilled workers contracts performed in the last 3 years should be at least **Rs. 60 Million**
   - 3.3 Must have satisfactorily carried out at least one supply of skilled, semiskilled and unskilled workers contract to a Government Department/ Corporation/ University during the last 3 years for not less than **Rs. 20 Million.**
   - 3.4 Availability of trained and experienced Sri Lankan staff during the last 3 years should be at least 30
4. Interested bidders may obtain further information from Senior Assistant Registrar, General Administration, University of Jaffna, and inspect the bidding documents at the same address on any working day during working hours. Contact numbers: - Tele: 021 222 6517,Fax:- 021 222 6517.
5. A complete set of Bidding Documents in English Language could be purchased by interested Bidders on submission of a written application to the Senior Assistant Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely from 9.00 a.m. to 2.30 p.m. on any working day up to **16th February 2026** upon the submission of receipt for the payment of non-refundable Tender Fee of Rs.**5000.00.** The payment should be made in cash to the Shroff, University of Jaffna or the payment shall be deposited in favour of Bursar, University of Jaffna at the **People's Bank, University of Jaffna Branch Account Number** 970000060000276 at any Branch of People's Bank in Island wide.
6. Bidders are strongly advised to attend the **Pre-bid meeting on 11th February 2026 at 10.00 am** in the Board Room of the University of Jaffna and visit each location before pricing.
7. Bids shall be delivered or sent by registered post to the Chairman, Procurement Committee, University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57, to reach on or before **14.00 hrs, 23rd February 2026** or be deposited in the tender box kept in the Office of the Registrar on or before the above date and time. Bids will be opened soon after closing the Bids in the presence of the bidders' representatives who choose to attend.
8. Bids shall be valid for a period of 91 Days (should be as at 24th May 2026) from the date fixed for closing of bids or any extended period.
9. All Bids shall be accompanied by a Bid Security (Unconditional Guarantee) of Rupees Four hundred thousand only **(Rs. 400,000.00).** (Valid up to 24th June 2026)

**Chairman,**
**Procurement Committee,**
**University of Jaffna.**

(C-4910)

**2026 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் திகதி தொடக்கம் 2027 பெப்ரவரி 28 ஆம் திகதி வரை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை - நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் சிற்றுண்டிச்சாலை, வாகனப் பாதுகாப்பு நிலயத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்**

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலை, வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை 01.03.2026ஆம் திகதி தொடக்கம் 28.02.2027 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்களை 02.02.2026ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 12.02.2026ஆம் திகதி வியாழக்கிழமை வரை அலுவலக நாட்களில் வைத்தியசாலையிலுள்ள நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் அலுவலகத்தில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 4.00 மணிவரை கீழ்வரும் மீளளிப்பு செய்யப்படாத தொகையைச் செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

| சேவை விபரம் | மீளளிப்பு செய்யப்படாத தொகை | மீளளிப்புத் தொகை |
|---|---|---|
| வாகனப் பாதுகாப்பு நிலையம் | 2000.00 | 200,000.00 |
| சிற்றுண்டிச்சாலை | 2500.00 | 300,000.00 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை 13.02.2026 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 4.00 மணிக்கு முன்னர் நேரடியாக மீளளிப்புத் தொகையினைச் செலுத்தி ஒப்படைக்கப்படல் வேண்டும். மீளளிப்புத் தொகை பணமாக மட்டுமே செலுத்த முடியும். குறித்த திகதி, நேரத்தின் பின் வழங்கப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கேள்விப் பத்திரங்கள் யாவும் திரு.கணேஸ் விஜயசேகரன், தலைவர், நோயாளர் நலன்புரிச் சங்கம், மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி எனும் முகவரியிடப்பட்டு கடித உறைக்குள் உள்ளடக்கி பொறியிட்டு (Sealed) அதன் இடது பக்க மேல் மூலையில் **2026 ஆம் ஆண்டு பங்குனி மாதம் தொடக்கம் 2027 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் சிற்றுண்டிச்சாலை/வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல்** விண்ணப்பம் என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

சிற்றுண்டிச்சாலை கேள்விப் பத்திரங்கள் 14.02.2026 ஆம் திகதி (சனிக்கிழமை) மு.ப 10.00 மணிக்கும் வாகனப் பாதுகாப்பு நிலைய கேள்விப் பத்திரம் 14.02.2026ஆம் திகதி (சனிக்கிழமை) மு.ப 11.00 மணிக்கும் கேள்வி சபையினதும் சட்டவாளர் முன்னிலையிலும் திறக்கப்படும். அத்தருணம் விண்ணப்பதாரிகள் நிச்சயமாக சமூகமளித்தல் வேண்டும். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் விண்ணப்பதாரி பங்குகொள்ள முடியாதுவிடின் தங்கள் பிரதிநிதியை உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் மூலம் பங்குகொள்ளக்கூடியவாறு அனுப்பி வைக்க முடியும். இவ்விடயம் பற்றி தனிப்பட்ட அறிவித்தல் வழங்கப்படமாட்டாது. தங்களால் வழங்கப்படும் மீளளிப்பு தொகையை 03.03.2026 ஆம் திகதி தொடக்கம் 06.03.2026 ஆம் திகதி வரைக்குட்பட்ட காலப்பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும். காசோலை மூலம் மட்டுமே மீளளிப்புத் தொகை வழங்க முடியும்.

**திரு.க.விஜயசேகரன்,**
**தலைவர்,**
**நோயாளர் நலன்புரிச்சங்கம்.**

(C-4909)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சாவகச்சேரியில் நாளைமுதல்

# ‘லஞ்சீற்’ பாவனைக்கு தடை

# மீறினால் அபராதம்

### தவிசாளர் ஸ்ரீபிரகாஷ்

**(யாழ்ப்பாணம்)**

**சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட உணவகங்கள் மற்றும் திருமண மண்டபங்களில் நாளை முதல் லஞ்சீற் பாவனை முற்றாகத் தடை செய்யப்படுவதாகவும் அதனை மீறும் பட்சத்தில் தண்டப்பணம் அறவிடப்படும் எனவும் நகரசபைத் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஷ் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

மேற்படி நடைமுறை 2026 ஆம் ஆண்டு முதலாம் மாதத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய விடயம்.ஆனால் நாம் மக்கள் விழிப்புணர்வு அடைவதற்காக ஒருமாதகாலம் அவகாசம் வழங்கி அதனை நடைமுறைப்படுத்துகிறோம்.

உணவகங்கள் மற்றும் திருமண மண்டபங்கள் லஞ்சீற் பாவனைக்குப் பதிலாக வாழையிலை, தேக்கம் இலை, காட்போட் பெட்டிகளில் உணவுகளைப் பரிமாற முடியும். அத்துடன் உணவுத் தட்டுக்களை உரிய வெப்ப நிலையில் சுடுநீரில் கழுவியும் உணவினைப் பரிமாற முடியும்.

உடல் ஆரோக்கியத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக காணப்படும் லஞ்சீற் பாவனையைத் தடை செய்ய வேண்டியது அவசியம்.இதன் பாவனை புற்றுநோயை ஏற்படுத்தக்கூடியது.

எனவே சாவகச்சேரி நகர சபையின் நடவடிக்கைக்கு உணவகங்கள் மற்றும் திருமண மண்டபங்கள் ஒத்துழைப்பு வழங்கி எதிர்கால சந்ததியினரை நோய்நொடியில் இருந்து காப்பாற்ற முயற்சிக்க வேண்டும் என தெரிவித்தார். (8-30)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையினால் அமைக்கப்பட்டுள்ள நாவலர் சோலை முன்பள்ளியின் கட்டடத் திறப்பு விழா நிகழ்வானது தைப்பூசத் திருநாளான நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு சைவபரிபாலன ஆச்சிரம மண்டப வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

சைபரிபாலன சபை மூத்த உறுப்பினர் திருமதி. நாச்சியார் செல்வநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழகத் துணை வேந்தர் சிவக்கொழுந்து சிறிசற்குணராசா மற்றும் சிறப்பு விருந்தினராக யாழ் வலயக் கல்வி அலுவலகம், முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் தம்பிராசா சிவகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (8)



காரைநகரில் அமைந்துள்ள உள்ளூர் உற்பத்தி நிறுவனமான பல்லுயிர் நிறுவனத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சூரிய உலர்த்தியானது நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கைலாயப்பிள்ளை சிவகரன், தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனத்தின் தலைவர் ரோஹித்த பிரசாந்த, அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் எந்திரி ரத்நாயக்க, காரைநகர் பிரதேச செயலர் ரஞ்சனா, மாவட்ட விவசாய பணிப்பாளர் திருமதி மௌலீஸ்வரன், கிராம சேவகர், பல்லுயிர் நிறுவனத்தினர் என பலரும் கலந்துகொண்டனர். (படம்:- கஜிந்தன்)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அருள்மிகு ஸ்ரீ சிவ ஞானவைரவ சுவாமி திருக்கோயில் புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 11.03 மணிமுதல் 11.55 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்திற்கு முன்னதாக எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு கர்மாரம்பக் கிரியைகள் ஆரம்பமாகித் தொடர்ந்து 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி முதல் நண்பகல் 2 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளதென பாடசாலைச் சமூகத்தினர் அறிவித்துள்ளனர். (3)

## ஏடு தொடக்குதல்

(யாழ்ப்பாணம்)

சிவகுரு ஆதீனத்தில் தைப்பூசத்தினமான நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆதீனமுதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளால் ஏடு தொடக்கப்படும்.

தங்கள் பிள்ளைகளுக்கு ஏடு தொடக்க விரும்புவோர் 077 222 0103 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)




## பேருந்துகள் மக்கள் சேவைக்கா? ஒன்றை ஒன்று முந்தி விபத்திற்குள்ளாவதற்கா?

பொதுமக்களின் தினசரி போக்குவரத்து தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடன் அரசு மற்றும் தனியார் துறைகளால் அறிமுகப்படுத்தப்பட்டு, நீண்டகாலமாக நடைமுறையில் இருந்து வரும் பேருந்து சேவை, மக்களைப் பாதுகாப்பாக உரிய இடங்களில் கொண்டு சேர்ப்பதற்காகவே உருவாக்கப்பட்ட ஒரு அத்தியாவசிய மக்கள் சேவையாகும்.

ஆனால் அந்த நோக்கம் இன்றைய நடைமுறையில் முழுமையாகப் பின்பற்றப்படுகிறதா என்றால், அதற்கு இல்லை என்றே பதில் சொல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

கடந்த காலத்திலிருந்து இன்று வரை அரசு மற்றும் தனியார் பேருந்துகளுக்கிடையே நிலவி வரும் தேவையற்ற போட்டி மனப்பான்மை, பொதுமக்களின் பாதுகாப்பை பெரிதும் கேள்விக்குறியாக்கி வருகிறது.

மக்கள் பயன்பாட்டிற்காக இயக்கப்பட்டு வரும் பேருந்துகளின் முதன்மைக் கடமை; பயணிகளை பாதுகாப்பாக ஏற்றி பாதுகாப்பாக இறக்குவதே ஆகும்.

ஆனால் சில தனியார், அரச பேருந்து ஓட்டுநர்கள் பேருந்து நிறுத்தங்களில் நீண்ட நேரமாக காத்திருக்கும் பொதுமக்கள் தேவையை அலட்சியப்படுத்தி, தங்களுக்குள்ளேயே போட்டி போட்டு ஓட்டப் பந்தயத்தில் ஈடுபடுவது மிகவும் வேதனை அளிக்கும் விடயமாக உள்ளது.

அண்மையில் கூட வவுனியா நோக்கி பயணித்த அரச பேருந்தும் அதே திசையில் பின்னால் வந்த தனியார் பேருந்தும் மோதி விபத்துக்குள்ளாகியதைக் காணலாம்.

இவ்வாறு முண்டியடித்துச் செல்லும் போது பேருந்துகள் விபத்திற்குள்ளாகி, அதில் பயணிக்கும் அப்பாவிப் பொதுமக்கள் காயம் மற்றும் உயிரிழப்பு போன்ற பெரும் துயரங்களிற்கு உள்ளாகும் நிலை உருவாகிறது.

இந்த விபத்துக்களால் பாதிக்கப்படுவது ஓட்டுநர்கள் அல்ல, எந்தத் தவறும் செய்யாத பயணிகளே என்பதே மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்துகின்றது.

பொதுமக்களிற்கு சேவை செய்வதே பேருந்து ஓட்டுநர்களின் அடிப்படைக் கடமை என்பதை உணர்ந்து நிதானத்துடனும் பொறுப்புணர்வுடனும் தமது பணிகளை மேற்கொண்டால், இது போன்ற விபத்துக்களைப் பெருமளவில் தவிர்க்க முடியும். அதன்மூலம் யாருக்கும் இழப்பு ஏற்படாமல் பாதுகாக்கலாம்.

இதனைக் கருத்தில் கொண்டு, தனியார் மற்றும் அரச பேருந்து ஓட்டுநர்கள் மட்டுமன்றி, சம்மந்தப்பட்ட டிப்போக்கள் மற்றும் நிர்வாகங்களும் அரச மற்றும் தனியார் பேருந்துகளின் இணைந்த நேர சூசியைப் பின்பற்றும் நிலையைக் கொண்டு வந்து உரிய கண்காணிப்புடனும் பொறுப்புடனும் செயற்படுவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.



**அன்பு வாசகர்களே!**

**உங்கள் பிரதேசங்களில் தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சினைகளை ‘குறைகேள் அரங்கு’ இற்கு புகைப் படத்துடன் எழுதி அனுப்புங்கள்.**

“குறைகேள் அரங்கு”,
ஆசிரியர் வலம்புரி,
இல.191 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

076 636 3378
valampurii@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச சபை பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நிகழ்வானது எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யா/நடேஸ்வரக் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

காங்கேசன்துறை உப அலுவலக பொறுப்பதிகாரி அன்ரன் பிரான்சிஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வடக்கு பிரதேச சபை செயலாளர் சிவகுமாரன் சிவானந்தன் மற்றும் கௌரவ விருந்தினர்களாக யா/ நடேஸ்வரக் கல்லூரி அதிபர் பாலசுந்தரம் பாலகுமார், யா/ நடேஸ்வர கனிஷ்ட வித்தியாலய அதிபர் திருமதி.வசந்தராணி சுதர்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

## சிவகுரு ஆதீனத்தில் சிறுவர் விழுமிய வகுப்பு


(யாழ்ப்பாணம்)

சிவகுரு ஆதீனத்தில் சிறுவர் விழுமிய வகுப்பு நாளை முதல் ஆரம்பமாகவுள்ளது.

4 முதல் 15 வயது வரையிலான சிறுவர்களுக்காக ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை இவ் வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

எனவே, இவ் வகுப்பில் புதிய மாணவர்களும் இணைந்து கொள்ளலாம் என தவத்திரு வேலன் சுவாமிகள் அறிவித்துள்ளார்.மேலதிக தகவல்களுக்கு - 077 222 0103 (8)

## இணுவில் கந்தசுவாமி ஆலயத்தின் உலகப் பெருமஞ்சத் திருவிழா



(யாழ்ப்பாணம்)

அருள்மிகு இணுவில் கந்தசுவாமி ஆலயத் தைப்பூச மஞ்சத் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்தில் இருந்து இணுவில் கந்தசுவாமி ஆலயத்தை நோக்கிய பாற்குடப்பவனி காலை 6 மணிக்கு ஆரம்பமாகும். காலை 9 மணி தொடக்கம் 2 மணிவரை பாரம்பரிய பொங்கல் நடைபெற்று இரவு 6 மணிக்கு வசந்த மண்டபபூஜையை தொடர்ந்து உலகப் பெரு மஞ்சப் பவனியும் இடம்பெறவுள்ளது. (3)

# பொலிஸ் திணைக்களத்தில் 32 ஆயிரம் வெற்றிடங்கள்

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் சேவையில் சுமார் 32 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் எனவும் தற்போது தேவையான எண்ணிக்கையை விடக் குறைவான எண்ணிக்கையிலேயே பொலிஸார் கடமைகளைச் செய்து வருகின்றார்கள் எனவும் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

குற்றங்களைத் தீர்ப்பதில், பொலிஸ் குற்றப்பிரிவில் இணைக்கப்பட்டுள்ள கைரேகை அதிகாரிகள், குற்றப் பகுப்பாய்வு அதிகாரிகள் மற்றும் தடயவியல் புகைப்படக் கலைஞர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் உரையாற்றிய அவர், இந்த ஆண்டில் 2500 பொலிஸ் அதிகாரிகள் ஓய்வு பெற உள்ளனர்.

அத்தோடு அடுத்த ஆண்டில் மேலும் 2700 அதிகாரிகள் ஓய்வு பெறவுள்ளதாகவும் நிலைமையைக் கருத்தில் கொண்டு, எதிர்காலத்தில் இலங்கை பொலிஸ் சேவையில் 10 ஆயிரம் பேரை நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (க-8)



மட்டக்களப்பு காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தி அடிகளின் 78 ஆவது சிரார்த்த தினம் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நேற்றைய தினம் அனுஷ்டிக்கப்பட்டது. மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் காந்தீயம் பத்திரிகையும் வெளியிட்டு வைக்கப்பட்டது.


**யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி சங்கம் (தலைமையகம்)**

40, முனிஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம். T.P-021 221 4460

**அறிவித்தல்**

**பயணிகள், பொது மக்கள் ஏனையவர்கள் கவனத்திற்கு**

யாழ்.பட்டினப் பகுதியில் எமது சங்க பதிவு ஓட்டோக்கள் இரவு பகலாக வாடகை சேவையிலீடுபடுகின்றன. இவர்களின் சேவை ஒழுங்கினை எமது சங்கம் கண்காணிக்கின்றது.

ஆனால் இதற்கு இடையூறாக பிக்மி ஓட்டோ சேவை எனக் கூறிக் கொண்டு சிலர் பூநகரி, காரைநகர், கைதடி, சுன்னாகம், அளவெட்டி, சங்கானை ஆகிய பகுதிகளிலிருந்து இரவு, பகலாக யாழ்.பட்டினப் பகுதிகளில் சுற்றிக் கொண்டு எமது ஓட்டோ சாரதிகளுக்கு அச்சுறுத்தலில் ஈடுபடுகின்றனர்.

எனவே இப் பயங்கர செயற்பாட்டில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் அனைவரும் கவனம் எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம். (6704)

நிர்வாகம்
யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி சங்கம் (தலைமையகம்)



JAFFNA EDUCATION FAIR 2026
Your Future Begins Here...
6th EDITION

**யாழ் உயர்கல்விக் கண்காட்சி**



**கண்காட்சியின் சிறப்பு அம்சங்கள்**

- 40ற்கும் மேற்பட்ட உயர்கல்வி நிறுவனங்களுடனான சந்திப்பு
- புகழ்பெற்ற உள்நாட்டு வெளிநாட்டு உயர்கல்வி நிறுவனங்களின் வருகை
- வெளிநாடு செல்ல காத்திருக்கும் அனைவருக்கும் ஆலோசனை
- பாடநெறிகளுக்கான கட்டணங்களின் விலைக்கழிவு மற்றும் புலமைப்பரிசில்கள்
- இலவச தொழில் வழிகாட்டலும் ஆலோசனைகளும்

**இன்று ஆரம்பம்**

- கா.பொ.த உயர்தரப் பரீட்சையை நிறைவு செய்து பெறுபேற்றுக்காக காத்திருக்கும் மாணவர்களுக்கு...
- தமது பிள்ளைகளுக்கு பொருத்தமான உயர்கல்வி துறையை தெரிவுசெய்து கொடுக்கவிருக்கும் பெற்றோர்களுக்கு...
- தமது தொழிலை மேம்படுத்தி அதற்கான மேலதிக பட்டப்படிப்புகளை பெற்றுக்கொள்ள காத்திருப்பவர்களுக்கு...
- எதிர்காலத்தில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு...

JAN 31st FEB 01st 2026 | VALAMPURI HOTEL JAFFNA | 9.00 am to 5.00 pm அனுமதி இலவசம் | For more details +94 77 565 6633

Platinum Sponsor: BCAS INTERNATIONAL UNIVERSITY PLACEMENTS | Gold Sponsors: BCAS CAMPUS, Imperial College of Business Studies, Achievers International, iCS | Silver Sponsors: ESU, Informatics Institute of Technology | Print Media Partner: வலம்புரி | Official Banking Partner: Sampath Bank | Supported by | Organized by: EVOLUTION EVENTS & EXHIBITIONS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## கியூபாவுக்கு எண்ணெய் வழங்கும் நாடுகள் மீது கடும் வரி

### ட்ரம்ப் அதிரடி



(மாட்ரிட்)

கம்யூனிச நாடான கியூபாவுக்கு மசகு எண்ணெய் வழங்கும் நாடுகள் மீது கடும் வரிகளை விதிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வியாமுக்கிழமை மிரட்டல் விடுத்துள்ளார்.

இதன் மூலம் கியூபா மீதான தனது பொருளாதார அழுத்தத்தை அவர் உச்சகட்டத்திற்குக் கொண்டு சென்றுள்ளார்.

கியூபா அரசாங்கத்தை அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக்கு "அச்சுறுத்தல்" என குறிப்பிட்ட ட்ரம்ப், தேசிய அவசர நிலை பிரகடனத் தின் கீழ் இந்த நிறைவேற்று ஆணையில் கையெழுத்திட்டுள்ளார்.

கியூபாவுக்கு மசகு எண்ணெய் அல்லது பெற்றோலியப் பொருட்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழங்கும் எந்தவொரு நாட்டின் மீதும் மேலதிக வரிகளை விதிக்க இந்த ஆணை வழிவகை செய்கிறது.

இந்த உத்தரவில் குறிப்பிட்ட வரி விகிதங்களோ அல்லது நாடுகளின் பெயர்களோ இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.


எனினும், மெக்சிகோ மற்றும் ரஷ்யா போன்ற நாடுகள் இதன்மூலம் பாதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெனிசுலாதான் கியூபாவுக்கு நீண்டகாலமாக எண்ணெய் வழங்கி வந்தது.

தற்போது மதுரோவின் வீழ்ச்சிக்குப் பின்னர், கியூபாவுக்கான எண்ணெய் விநியோகம் முற்றிலும் நின்றுபோயுள்ளது.

"கியூபா விரைவில் வீழ்ச்சியடையும். வெனிசுலாவிலிருந்து இனி ஒரு சொட்டு எண்ணெயோ அல்லது ஒரு டொலர் பணமோ கியூபாவுக்குப் போகாது" என ட்ரம்ப் இந்த வார ஆரம்பத்தில் தெரிவித்திருந்தார். (3)

## ஸ்பெயினில் 5 இலட்சம் அகதிகளுக்கு சட்டபூர்வ அந்தஸ்து அறிவிப்பு!



(மாட்ரிட்)

ஸ்பெயினில் ஆவணங்கள் இன்றி சட்டவிரோதமாக குடியேறிய ஐந்து இலட்சம் பேருக்கு அங்கீகாரம் வழங்க அந்நாட்டு அரசு முடிவு செய்து உள்ளது.

ஐரோப்பாவில் உள்ள ஜேர்மனி, ஆஸ்திரியா, டென்மார்க் போன்ற நாடுகள் சட்டவிரோத குடியேற்றத்தை கட்டுப்படுத்தி வருகின்றன.

இந்நிலையில் ஸ்பெயினின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் தலைமையிலான அரசு அதற்கு விதிவிலக்காக புதிய சட்டம் ஒன்றை கொண்டுவர முடிவு செய்துள்ளது.

ஸ்பெயினின் மனிதாபிமான அடிப்படையில் குடியேற்றத்தை வலுப்படுத்தும் நடவடிக்கையாக, கடந்த டிசம்பர் 31இற்கு முன் ஸ்பெயினுக்கு வந்தவர்களுக்கு சட்டப்பூர்வ அந்தஸ்து வழங்குவதாக அறிவித்துள்ளது.




ஆவணங்கள் இல்லாமல், குறைந்தபட்சம் ஐந்து மாதங்கள் தொடர்ச்சியாக ஸ்பெயினில் வசித்து, எந்த குற்றப் பின்னணியும் இல்லாதவராக இருந்தால் சட்டப்பூர்வ அங்கீகாரம் கோரி விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் கொலம்பியா, பேரு, வெனிசுலா போன்ற தென் அமெரிக்கா மற்றும் ஆபிரிக்க நாடுகளில் இருந்து வந்தவர்களுக்கு பெரும் நிவாரணமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (3)

## பேச்சுவார்த்தை ... வரவேற்க ...

### உக்ரைனுக் ...



(மொஸ் ...
ர ...
இடையி ...
செல்லும் ...
வார்த்தை ...
மொஸ்கே ...
யோகபூர் ...

உக்ரைன் ஜனாதிபதி மொஸ்கோவிற்கு வருகை தந்தால், அவருக்கு முழுமையான பாதுகாப்பு வழங்கப்படும் என ரஷ்ய ஜனாதிபதி புடினின் உதவியாளர் யூரி உஷாகோவ் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தைக்கு அவர் தயாராக இருந்தால், ரஷ்யா அவரை வரவேற்கத் தயாராக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அழைப்பு குறித்து கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ஜெலென்ஸ்கி, பேச்சுவார்த்தைக்கான கதவுகள் திறந்திருப்பதை வரவேற்பதாகக் கூறினார்.

இருப்பினும், ரஷ்யா மொஸ்கோவிற்கு அழைப்பதானது பேச்சுவார்த்தையைத் தவிர்க்கும் ஒரு தந்திர... சந்தேக...

"எங்... குதல்க... மொஸ்... வார்த்... நடப்பி... அமை... யஸ்தத்... முதற்க... மாகியு...

இதி...

## பிரித்தானிய குடிமக்களு...

### விசா விதிகளை தளர்த்திய...

(பீஜிங்)

பிரித்தானிய நாட்டவர்கள் இனி 30 நாட்கள் வரையிலான குறுகிய காலச் சுற்றுலா மற்றும் வணிகப் பயணங்களுக்கு சீனா செல்லும்போது அவற்றுக்கு விசா தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளுக்கு சீனாவினால் வழங்கப்பட்ட அதே சலுகையை இப்போது பிரித்தானியாவும் பெற்றுள்ளது.

பிரித்தானிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் சீனாவுக்கு பயணம் மேற்



கொண்டுள்ள நிலையில் இதற்கான உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதற்கிடையில் பிரித்தானியாவைத் தலைமையிடமாகக் கொண்ட முன்னணி மருந்து நிறுவனமான எஸ்ட்ராசெனொகா சீனாவில் 15 பில்லியன் டொல... போவ... வமாக...

இ... ஆம் ... பிரித்... ஒருவ... சீனப்... அமை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# தக்குத் தயார் என்றால் நாங்கள் தயார்!

## க்கு ரஷ்யா அழைப்பு



**ஸ்கோ) ரஷ்யா மற்றும் உக்ரைன் யிலான போர் நீண்டுகொண்டே லும் நிலையில், அமைதிப் பேச்சு தைக்காக உக்ரைன் ஜனாதிபதியை ஸ்கோவிற்கு வருமாறு ரஷ்யா உத்தி பூர்வமாக அழைப்பு விடுத்துள்ளது.**

ந்திரமாக இருக்கலாம் என அவர் தேகம் வெளியிட்டுள்ளார்.

"எங்கள் நாட்டு மக்கள் மீது தாக் தல்கள் நடத்தப்படும் சூழலில் மாஸ்கோ செல்வது கடினம், பேச்சு ார்த்தைகள் நடுநிலையான இடத்தில் ப்பதே சிறந்தது" என அவரது பதில்கள் மைந்துள்ளன. அமெரிக்காவின் மத்தி ஸ்தத்துடன் அபுதாபியில் ஏற்கனவே தற்கட்டப் பேச்சுவார்த்தைகள் ஆரம்ப ாகியுள்ளன.

இதில் அமெரிக்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு இரு தரப்பையும் இணக்கப் பாட்டிற்கு கொண்டுவர முயற்சி செய்து வருகின் றனர்.

இந்தநிலையில், ரஷ்யா தனது பிடிவாதமான சில நிபந்தனைகளை முன் வைத்துள்ள போதிலும், இரு நாட்டுத் தலைவர் களும் நேரடியாகச் சந்தித் துப் பேசுவது போரை முடி வுக்குக் கொண்டுவர உத வும் என சர்வதேச அரசி யல் அவதானிகள் கருது கின்றனர்.

எதுஎப்படியிருப்பினும், தனது நாட்டின் ஒரு அங் குல நிலத்தைக்கூட விட் டுக் கொடுக்கப் போவ தில்லை என்பதில் உக் ரைன் ஜனாதிபதி உறுதி யாக உள்ளமை குறிப் பிடத்தக்கது. (3)

## 14 ஆண்டுகளுக்குப் பிறகு

### பாகிஸ்தான் - பங்களாதேஷ் இடையே நேரடி விமான சேவை ஆரம்பம்



(கராய்ச்சி)

பங்களாதேஷ் - பாகிஸ் தான் இடையே கடந்த 14 ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நேரடி விமானப் போக்குவரத்து மீண்டும் தொடங்கப்பட் டுள்ளது.

பிமான் பங்களாதேஷ் ஏர்லைன்ஸ் நிறுவனத் தின் விமானம், நேற்று முன்தினம் 150 பயணிக ளுடன் டாக்காவிலிருந்து பாகிஸ்தானின் கராச்சி நகருக்குப் புறப்பட்டுச் சென்றது.

2012ஆம் ஆண்டுக்குப் பிறகு இருநாடுகளுக்கு இடையே நடைபெறும் முதல் வழக்கமான நேரடி விமானச்சேவை இதுவா கும்.

இதுவரை பங்களாதேஷ் மக்கள் பாகிஸ்தானுக்குச் செல்ல டுபாய் அல்லது தோஹா வழி யாகச் செல்ல வேண்டிய நிலை இருந் தது.

ஆனால் இனி வாரத் திற்கு இரண்டு முறை நேரடி விமானங்கள் இயக் கப்பட உள்ளன.

2024இல் பங்களா தேசத்தில் ஷேக் ஹசீனா அரசு வீழ்ந்த பிறகு, இடைக்கால தலைவராக முகமது யூனுஸ் பதவி ஏற்றார். அவரது தலை மையின்கீழ் அந்நாடு பாகிஸ்தானுடன் தனது உறவை மேம்படுத்தி வருகிறது. அதே சமயம், இந்தியாவுடனான உற வில் விரிசல் அதிகரித்து வருகிறது. ஏற்கனவே 2024 நவம்பரில் கராச்சி யிலிருந்து பங்களாதே ஷின் சிட்டகாங் துறை முகத்திற்குச் சரக்குக் கப்பல் போக்குவரத்துத் தொடங்கப்பட்ட நிலையில் தற்போது விமானச் சேவையும் தொடங்கப் பட்டுள்ளது. (3)

## ளுக்கான

## தீய சீனா!



டாலர் முதலீடு செய்யப் போவதாக அதிகாரபூர் வமாக அறிவித்துள்ளது.

இதேவேளை 2018 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிரித்தானியப் பிரதமர் ஒருவர்மேற்கொண்ட முதல் சீனப்பயணம் இதுவாக அமைந்துள்ளது. (3)

## தாய்வானின் முதலாவது நீர்மூழ்கிக்கப்பல்

## சோதனை வெற்றிகரமாக நிறைவு

(தாய்பே)

சீன கடற்படைக்கு எதிரான தற்பாதுகாப்பினை வலுப்படுத்துவ தையும், போர் ஏற்பட்டால் முக்கிய கடல் பாதைகளைப் பாதுகாப் பதையும் நோக்கமாகக் கொண்ட திட்டத்தில் ஒரு பெரிய மைல் கல்லை தாய்வான் எட்டியுள்ளது.

தனது நாட்டில் முதன் முறையாக உருவாக்கப் பட்ட நீர்மூழ்கிக் கப்பலுக்கான கடல் சோதனையை நேற்று முன்தி னம் நிறைவுசெய்தது.

சீனா தனது சொந்தப் பிரதேசமாக உரிமை கோரும் தாய்வான், தனது இறையா ண்மை உரிமைகளை நிலை நாட்ட அன்றாடம் இராணுவப் பயிற்சிகளை மேற்கொண்டு வரும் நிலையில், அதன் ஆயுதப்படைகளை நவீன மயமாக்கும் ஒரு இலட்சிய திட்டத்தின் முக்கிய பகுதி யாக உள்நாட்டு நீர்மூழ்கிக் கப்பல் திட்டத்தை மாற்றியுள்ளது.

இந்த நீர்மூழ்கிக் கப்பல் திட்டத்திற்காக அமெரிக்கா மற்றும் பிரித்தானியா உட்பட பல நாடுகளின் நிபுணத்து வம் மற்றும் தொழில்நுட் பத்தையும் தாய்வான் பெற் றுள்ளது.

இது பீஜிங்கின் பிராந்திய உரிமைகோரல்களை நிராக ரிக்கும் தாய்வானுக்கு ஒரு திருப்புமுனையாகும்.

எட்டு நீர்மூழ்கிக் கப்பல் [illegible] கட்டுமானப் பணிகளை முன் னெடுத்து வரும் நார்வால் நிறு வனம் வியாழக்கிழமை பிற்பகு தியில் ஒரு அறிக்கையில், நார்வால் என்று பெயரிடப்பட்ட முதல் நீர்மூழ்கிக் கப்பல் நீருக்கு அடியிலான சோதனை யினை வெற்றிகரமாக நிறைவு செய்த தாகக் கூறியது.

2027ஆம் ஆண்டுக்குள் குறைந்தது இரண்டு உள்நாட்டில் உருவாக்கப்பட்ட நீர்மூழ்கிக் கப்பல்களை பாதுகாப்பு பணி களில் நிலைநிறுத்த தாய்வான் எதிர்பார்த்துள்ளதாகவும் தகவல் கள் தெரிவிக்கின்றன. (3)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாணவர்களுக்கான அவசர நிலை அறிவுறுத்தல்களை வெளியிட்டது தேசிய சிறுவர்கள் பாதுகாப்புச் சபை

(கொழும்பு)

அவசரநிலை ஏற்பட்டால் மாணவர்களுக்கு உதவுவதற்காக ஆசிரியர்களுக்கான வழிகாட்டுதல்களின் தொகுப்பை வெளியிட தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய, ஆசிரியர்கள் மாணவர்களுக்காக எவ்வாறான விடயங்களை முன்னெடுக்க வேண்டும்? எவ்வாறான விடயங்களைச் செய்யக்கூடாது? என இரண்டு பிரிவுகளாக இந்த வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி மாணவர்கள், சீருடை, காலணிகள் மற்றும் ஏனைய பாடசாலை உபகரணங்கள் இல்லாமல் பாடசாலைக்கு வருகை தந்தால், அவர்களை வித்தியாசமாக நடத்தக்கூடாது என்றும், மாணவர்கள் கூறும் விடயத்தை செவிமடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மாணவர்கள், பாடசாலையைப் பாதுகாப்பான இடமாக உணரக்கூடிய வகையில் மாற்ற வேண்டும்.

அத்துடன் அவர்களுக்கு எதிர்காலத்திற்கான நம்பிக்கையை வழங்க வேண்டும் என்றும் அந்த வழிகாட்டல்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



மாணவர்கள், அதிர்ச்சிகரமான சூழ்நிலைகளை மீண்டும் அனுபவிக்கக் கூடாது என்பதுடன் பேரிடர்களை எதிர்கொண்ட மாணவர்களை பாரபட்சமான முறையில் நடத்தக்கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களின் ஓய்வறையிலோ அல்லது பாடசாலையில் உள்ள பிற இடங்களிலோ பேரிடர்களால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தொடர்பாக விவாதிக்கக்கூடாது.

அதேநேரம் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை மாணவர்களுக்கு வழங்கக்கூடாது என்றும் தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகாரசபையின் வழிகாட்டுதலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1992- RC
நட்சத்திரம்: சுவாதி
12 இல் செவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc, Developer (pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16027

பிறப்பு:1989-இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி-பா: 35 1/2
உயரம்- 5'8"
தகைமை/தொழில்-A/L, Super Market & Travels
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16028

பிறப்பு:1993-இந்து
நட்சத்திரம்:பூராடம்
7இல் செவ்
உயரம்:5 1/2
தகைமை/தொழில்:BED, Teacher
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/16030

பிறப்பு: 1983- இந்து
நட்சத்திரம்: விசாகம்
உயரம்:5'6"
தகைமை/தொழில்-A/L, Australia
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16033

பிறப்பு: 1985- இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி-பா: 33 1/2
12 இல் செவ்
உயரம்:5'5"
தகைமை/தொழில்: A/L.கடை
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16034

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி-பா: 5 1/2
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Dip in English, Aari Work
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/16046

பிறப்பு: 1993-இந்து
நட்சத்திரம்: உத்தாடம்
7 இல் செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Nursing Course
எதிர்பார்ப்பு: வெளிநாடு (Canada)
தொ.இ: G/16048

பிறப்பு-1990-இந்து
நட்சத்திரம்: விசாகம்
தகைமை/தொழில்: Degree, Work
எதிர்பார்ப்பு: வெளிநாடு (Only UK)
தொ.இ: G/16050

பிறப்பு: 1997-இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
7இல் செவ்
கி.பா - 52
உயரம்: 5'4"
தகைமை/தொழில் -BSc, PHD, Data Scientist
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16051

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்:அனுசம்
7இல்செவ்
கி.பா -48
உயரம்: 5'4"
தகைமை/தொழில் -BSc, MSc, Project Engineer (USA)
எதிர்பார்ப்பு: Engineer, IT
தொ.இ: G/16055

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 533



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## மனநலம்!

"நலம் நலமறிய ஆவல்!" என்று கடிதங்களிலே எழுதுவது நம் வழக்கம். உடல் நன்றாக இருக்கிறதா என்ற அர்த்தத்திலேதான் அப்படி எழுதுகிறோம்.

மனது நன்றாக இருக்கிறதா என்று யாரையும் பார்த்து நாம் கேட்பதில்லை! நாம் அப்படிக் கேட்டாலும் சந்தேகப்படுவார்கள்! உடல் நன்றாக இருந்தால் மனதும் நன்றாக இருக்கும். அதே மாதிரி மனது நன்றாக இருந்தால் தான் உடலும் நன்றாக இருக்கும்.

உடலை நன்றாக வைப்பது எப்படி என்பதைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். மனதை நன்றாக வைத்திருப்பது எப்படி? அதுதான் இன்றைக்குத் தகவல்! முதலிலே நாம் யார் என்பது நமக்கு நன்றாகத் தெரிய வேண்டும்! நம்மைப் பற்றிய அறிவு நமக்குத் தேவை.

நம்முடைய பலம் என்ன என்பது நமக்குத் தெரியவேண்டும். நம்முடைய பலவீனம் என்ன என்பது நமக்குத் தெரிய வேண்டும். நம்முடைய பலவீனங்களிலே எதை எதைப் போக்கிக் கொள்ள முடியுமோ அதை அதைப் போக்கிக் கொள்ள வேண்டும்.

நம்முடைய பலம் என்னென்னவோ அதையெல்லாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இரண்டாவது விடயம் என்னவென்றால் யாரையாவது பார்த்து விட்டு அவர் மாதிரி நாம் ஆகவேண்டும் என்று ஆசைப்படக் கூடாது. நாம் நாமாகத் தான் இருக்க வேண்டுமே தவிர, இன்னொருவர் மாதிரி ஆகக்கூடாது! திறமைகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

நமக்குத் தெரிந்த ஒருவகை. மற்றவர்களுக்குத் தெரிந்த திறமைகள் ஒருவகை. நமக்கு மட்டும் தெரிந்த - மற்றவர்களுக்குத் தெரியாத திறமைகள் ஒருவகை. இரண்டு பேருக்கும் தெரியாத திறமைகள் ஒருவகை.

இப்படிப் பிரித்துப் பார்த்து நம் திறமைகளைக் கண்டுபிடித்து நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

இன்னொரு விடயம் அடைய முடியாத இலட்சியங்களை இலக்குகளாக வைத்துக்கொண்டு அதை அடைய வேண்டும் என்று நினைத்து அவஸ்தைப்பட்டுக் கொண்டு இருக்கக் கூடாது. அது மனதை நிம்மதி இல்லாமல் செய்துவிடும்.

நல்ல நபர்களாகப் பார்த்து சிநேகம் பிடிக்க வேண்டும். பிரச்சினைகளையும் - போராட்டங்களையும் கண்டு பயந்துவிடக் கூடாது. அதையெல்லாம் எதிர்த்து நின்று சமாளிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். ஜெயித்துவிட்டால் துள்ளுவதும் தவறு.

தோற்றுவிட்டால் துவண்டு போவதும் தவறு. நீங்கள் எந்த உத்தியோகத்திலே இருக்கிறீர்களோ அல்லது எந்தத் தொழிலைச் செய்கிறீர்களோ அது சம்பந்தப்பட்ட திறமைகளை நன்றாக வளர்த்துக் கொள்ள வேண்டும்.

சூழ்நிலைக்குத் தகுந்த மாதிரி நம்மை மாற்றிக் கொள்வதற்கு கற்றுக்கொள்ள வேண்டும். இதையெல்லாம் பழக்கத்திலே கொண்டு வந்துவிட்டால் மனது எப்போதும் தெளிவாக இருக்கும்!

மனம் உணர்ச்சிகளை மறைத்து வைக்கிறது- மனப் போராட்டங்களை அடக்கி வைக்கிறது இதெல்லாம் மனநலத்தைப் பாதிக்கக்கூடிய விடயங்கள்.

அதனாலே மனதுக்கு இதமான ஒரு நண்பரைத் தேடிக்கொள்வது நல்லது. அவரிடம் உங்கள் மனச்சுமையை சொல்லுங்கள், அப்படி சொன்னாலே உங்கள் சுமை குறையும்!

இப்படியெல்லாம் நிபுணர்கள் நமக்கு நிறைய யோசனை சொல்கிறார்கள். அதனாலே மனதையும் உடம்பையும் நன்றாக வைத்துக்கொண்டால் வாழ்க்கை நமக்கு உற்சாகமாக இருக்கும்.

இல்லை என்றால் அது உபத்திரமாகத்தான் தெரியும்.

மனதுக்கு இதமான ஒரு நண்பரைத் தேடிக் கொள்வது நல்லது என்று சொன்னோம் - இல்லையா?

அது மாதிரி ஒருவர் கிடைப்பாரா என்று நம் ஆள் ஒருவர் தேடிக் கொண்டிருந்தார்.

ஒருவர் கிடைத்தார். அவரிடம் இவர் மனதிலே உள்ள கஷ்டத்தைச் சொன்னார். சார் "ஒருவனுக்கு ஒருத்தி" என்பது ரொம்ப நல்ல பண்பாடு சார். அதைப் பற்றிப் புரிந்து கொள்ளாமல் போனதனாலேதான் இன்றைக்கு நான் அவஸ்தைப் படுகிறேன்.

எனக்கு இரண்டு மனைவி சார். மனது சரியாகவே இல்லை. ஏன் சார் இரண்டு மனைவியோடு சந்தோஷமாக குடும்பம் நடத்துவது எப்படி? கொஞ்சம் சொல்லுங்களேன்" என்றார்.

"அது எப்படி என்று எனக்குத் தெரியாது!" என்றார் அவர். "ஏன்?" என்று கேட்டார் இவர். "எனக்கு மூன்று மனைவியாச்சே!" என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நாளாந்தம்

## 100 புற்றுநோயாளர்கள் அடையாளம்

(கொழும்பு)

**இலங்கையில் நாளொன்றுக்கு நூறு புதிய புற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்படுவதாகவும், அவர்களில் சுமார் 40 நோயாளர்கள் உயிரிழப்பதாகவும் தேசிய புற்றுநோய்த் தடுப்பு வேலைத்திட்டத்தின் சமூக மருத்துவ நிபுணர் ஹசரலி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

பெப்ரவரி 4ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் உலக புற்றுநோய் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"மாற்றங்கள் மூலம் இணைவோம்" என்பதே இந்த ஆண்டு உலக புற்றுநோய் தினத்தின் கருப்பொருளாகும்.

உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, 2022 ஆம் ஆண்டில் உலகில் 20 மில்லியன் புதிய புற்றுநோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

புற்றுநோய் தொடர்பான மரணங்களின் எண்ணிக்கை 10 மில்லியனாக உள்ளது.

2022 ஆம் ஆண்டில் இலங்கையில் 35 ஆயிரத்து 855 புதிய புற்றுநோயாளர்கள் பதிவாகியுள்ளனர். 2021 ஆம் ஆண்டில் புற்றுநோய் காரணமாக 14 ஆயிரத்து 986 மரணங்கள் பதிவாகியுள்ளன.

புதிதாகப் பதிவாகும் புற்றுநோயாளர்களில் சுமார் 19 ஆயிரத்து 500 பேர் பெண்களும், 16 ஆயிரத்து 400 பேர் ஆண்களும் என மருத்துவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (8)



வீரத் தமிழ்மகன் முத்துக்குமார் அவர்களின் 17 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் தாயக நினைவேந்தல் பணிமனையில் அதன் ஒருங்கிணைப்பாளர் ஆரோகன் ஒழுங்கமைப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. நிகழ்வில் முத்துக்குமார் உட்பட 26 பேர் தொடர்பிலான இரு புத்தகங்களும் தமிழ்த் தேசியப் பற்றாளரும் தென்னிந்திய திரைப்பட இயக்குநருமான பா.சந்திரன் அவர்களால் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

# காசோலை வழங்கல்

(கிளிநொச்சி)

தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனத்தின் ஏற்பாட்டில் விவசாயிகளின் தானியக்களஞ்சியங்களை மேம்படுத்தல் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 15 விவசாயிகளுக்கு 45 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை வழங்கும் நிகழ்வு கனகாம்பிகைக்குளம் நெல் களஞ்சிய சாலை அலுவலகத்தில் நடைபெற்றது. தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனத்தின் மாவட்ட உத்தியோகத்தர் என்.சோமகாந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் குறித்த நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ரோகித பிரசாந்த கலந்து கொண்டு பயனாளிகளுக்கான காசோலையை வழங்கி வைத்தார். (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 700 | 450 | 300 | 600 | 500 | 400 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 150 | 200 | 380 | 370 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 500 | 500 | 500 | 450 |
| தக்காளி | 400 | 500 | 600 | 400 | 400 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 150 | 180 | 110 |
| கோவா | 250 | 250 | 300 | 300 | 220 | 220 |
| கரட் | 300 | 420 | 400 | 450 | 400 | 350 |
| பூசணி | 120 | 140 | 120 | 120 | 300 | 80 |
| புடோல் | 300 | 250 | 300 | 250 | 200 | 220 |
| வாழைக்காய் | 150 | 200 | 150 | 250 | 160 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 320 | 250 | 350 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 200 | 200 | 250 | -- |
| பாகற்காய் | 800 | 550 | 700 | 600 | 500 | 500 |
| வெண்டக்காய் | 400 | 400 | 300 | 400 | 300 | 350 |
| கருணைக் கிழங்கு | 300 | 250 | 300 | 300 | -- | 200 |
| பயற்றங்காய் | 600 | 500 | 800 | 600 | 600 | 400 |
| லீக்ஸ் | 350 | 450 | 300 | 400 | 300 | 350 |
| பீற்றூட் | 350 | 300 | 600 | 400 | 300 | 300 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 800 | 700 | 850 |
| முருங்கைக்காய் | -- | 8000 | 2000 | -- | -- | -- |
| போஞ்சி | 350 | 400 | 600 | 400 | 450 | 400 |
| கத்தரிதம்புள்ள | 600 | 300 | 300 | 400 | -- | -- |
| கீரை – 1 பிடி | 100 | 40-120 | 150 | 100 | -- | 80 |
| தேசிக்காய் | 300 | 150 | 200 | 200 | 150 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 160 | 150 | 100-150 | -- | 110 |
| இராசவள்ளி | 300 | 500 | 400 | 400 | -- | 450 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 400 | 400 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 160 | 200 | 200 | 150 | 130 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 80 | -- | 50 |
| வல்லாரை | 60 | 50 | 100 | 80 | -- | 70 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 200 | -- | 80 |

# இராசிபலன்

31.01.2026
தை 17 சனிக்கிழமை
திரயோதசி முற்பகல் 8.09 மணிவரை
சதுர்த்தசி பின்னிரவு 6.20 மணிவரை

புநர்பூசம் பின்னிரவு 1.59 மணிவரை
சுப நேரம் 3.36-5.06 மணிவரை
இராகுகாலம் 9.36-11.06 மணிவரை

சந்திராஷ்டமம்:
அனுசம், கேட்டை

வளவன்




கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், தேவையற்ற பிணக்குகளிலிருந்து விடுபடுவீர்கள், போசன சுகமுண்டு.




பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையலாம், மனச்சஞ்சலங்கள் சற்று கூடும்.




எதிர்பாராத சில சம்பவங்கள் இடம்பெறலாம், விட்டுப்போன உறவினர்கள் மீண்டும் வந்து சேரலாம், விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், உறவினர் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், தேவைகள் பூர்த்தியாகும், கௌரவமான நாள்.




வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.




குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், சிறப்பான நாள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.




பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும் நாள், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.




பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.




எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.




வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**பணம் என்பது [illegible] தோண்டுவது போன்றது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 967





43ஆம் அத்தியாயம்
"புலி எங்கே?"

ஆதித்த கரிகாலர் எப்பேர்ப்பட்ட ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டார் என்பதை வந்தியத்தேவன் கவனித்தான்.

கண்மூடித் திறக்கும் நேரத்தில் குதிரையைச் செலுத்திக் கொண்டு வந்து பன்றியின் மீது தன் கையிலிருந்த வேலைச் செலுத்தினான். வேல் பன்றியின் முதுகுத் தோலின் மீது மேலாகக் குத்தியது.

பன்றி உடம்பை ஒரு குலுக்குக் குலுக்கிக் கொண்டு திரும்பியது. அந்த வேகத்தில் வந்தியத் தேவன் கையில் பிடித்திருந்த வேலின் பிடி நழுவி விட்டது.

பன்றியின் முதுகில் இலேசாகச் சென்றிருந்த வேல் நழுவிக் கீழே விழுந்தது. பன்றி இப்போது வந்தியத் தேவன் பக்கம் திரும்பி ஓடி வந்தது. அவன் தன் அபாயகரமான நிலையை உணர்ந்தான்.

பன்றியின் தாக்குதலுக்கு அவனுடைய குதிரையினால் ஈடு கொடுக்க முடியாது. கையில் வேலும் இல்லை. இளவரசரோ இன்னும் குதிரையின் கீழிருந்து வெளிப்படுவதற்கு முயன்று கொண்டிருக்கிறார்.

தான் குதிரை மேலிருந்தபடி ஏதாவது ஒரு மரத்தின் மேல் தாவி ஏறிக் கொண்டால் தான் தப்பிப் பிழைக்கலாம். சீச்சீ! எத்தனையோ அபாயங்களுக்குத் தப்பி வந்து கடைசியில் கேவலம் ஒரு காட்டுப் பன்றியினாலேயா கொல்லப்பட வேண்டும்?

நல்ல வேளையாக அருகாமையிலேயே தாழ்ந்து படர்ந்த மரம் ஒன்று இருந்தது. வந்தியத்தேவன் குதிரை மீதிருந்து பாய்ந்து மரத்தின் கிளை ஒன்றைத் தாவிப் பிடித்துக் கொண்டான்.

கால் முதல் தோள் வரையில் அவனுடைய பலத்தை முழுவதும் பிரயோகித்து எழும்பி கிளை மீது ஏறிக் கொண்டான். அதே சமயத்தில் பன்றி அவனு டைய குதிரையை முட்டியது.

குதிரை தட்டுத்தடுமாறி விழப் பார்த்துச் சமாளித்துக் கொண்டு அப்பால் ஓடியது. கரிகாலர் இன்னமும் குதிரையின் அடியில் கிடந்தார். வந்தியத்தேவன் மரக்கிளை மீது இருந்தான். காட்டுப் பன்றி இருவருக்கும் நடுவில் நின்று இப்படியும் அப்படியும் திரும்பிப் பார்த்தது.

இரண்டு எதிரிகளில் யாரைத் தாக்கலாம் என்று அந்தக் காட்டுப்பன்றி யோசனை செய்கிறது என்பதை வந்தியத் தேவன் அறிந்தான்.

இளவரசர் இன்னும் குதிரைக்கு அடியிலிருந்து விடுவித்துக் கொண்டு வெளிவந்த பாடில்லை.

வெளிவந்து விட்ட போதிலும் பன்றியின் தாக்கு தலை அவரால் அச்சமயம் சமாளிக்க முடியுமா என்பது சந்தேகந்தான்.

அவர் கையில் உடனே பிரயோகிக்கக் கூடிய ஆயுதம் இல்லை. வில்லை வளைத்து அம்பு விட வேண்டும். குதிரைக்கு அடியில் விழுந்து அகப்பட்டுக் கொண்டதில் அவருக்குப் பலமான காயம் பட்டிருந்தாலும் பட்டிருக்கலாம்.

எப்படியும் இளவரசருக்குச் சிறிது சாவகாசம் ஏற்படுத்திக் கொடுப்பது அவசியம். இவ்வளவையும் மின்னல் மின்னும் நேரத்தில் வந்தியத்தேவன் யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தான்.


தான் ஏறியிருந்த மரக்கிளையைப் பலமாக உலுக்கி ஆட்டிக் கொண்டே "ஆகா ஊகூ" என்று பெரிதாகச் சத்தமிட்டான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## இப்பொழுதே செய்யலாம்



ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் தன் நாட்டுக்குக் கிழக்குப் பக்கம் இருந்த நாட்டையும் தன் ஆட்சிக்குக் கொண்டு வரவேண்டுமென்று நினைத்தான்.

அதனால் பெரும்படை திரட்டி அந்நாட்டை முற்றுகை இட்டான். பல நாட்கள் கடும் போர் நடந்த பின்னர் அந்நாட்டைக் கைப்பற்றினான்.

வெற்றி வீரனாகத் திரும்பும் தம் அரசனை வரவேற்க நாடே விழாக் கோலத்துடன் காட்சியளித்தது. நாடு திரும்பிய அரசன் தலைநகரத்தில் இருந்த துறவி ஒருவரின் அருளாசியைப் பெற அவரிடம் சென்றான்.

அரசனை வரவேற்ற துறவி, "உன் எண்ணம் நிறைவேறியது இப்பொழுது மகிழ்ச்சிதானே" என்றார்.

"துறவியாரே! என் முன்னோர்கள் யாராலும் சாதிக்க முடியாத செயலைச் செய்துள்ளேன். என் மகிழ்ச்சியைக் கேட்கவா வேண்டும்? தங்கள் ஆசியை நாடி வந்துள்ளேன்" என்றான் அரசன்.

அதற்குத் துறவி, "உன் அடுத்த திட்டம் என்ன?" என்று கேட்டார்.

"இனி மேற்குப் பக்கத்தில் உள்ள நாட்டை என் ஆட்சியுடன் இணைப்பது தான்" என்றான் அரசன். அதற்குப் பிறகு என்ன செய்வதாகத் திட்டம் என்று கேட்டார் துறவி. இன்னொரு பக்கம் உள்ள நாட்டையும் வெல்வது தான்.

அதற்குப் பிறகு?, "என் நாட்டைச் சுற்றியுள்ள நாடுகள் எல்லாம் என் ஆட்சிக்கு உட்பட்டு இருக்கும். அதன் பிறகு அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் நாட்டை ஆளுவேன்" என்றான் அரசன்.

"அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் நாட்டை ஆளுவது தான் உன் திட்டம் என்றால் அதை நீ எப்பொழுதோ செய்திருக்கலாமே! அடுத்த நாட்டின் மீது படையெடுத்து இரு நாட்டு வீரர்களும் போர்க்களத்தில் இறந்திருக்க வேண்டாமே!" என்று சொன்னார் துறவி.

இதைக் கேட்டதும் அரசனின் அறிவுக் கண் திறந்தது. துறவியைப் பணிந்து விடை பெற்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளை நாம் அனுமதிக்கும் போது அவை நம்மை தடம் மாற்றி விடுகின்றன. - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பொலிஸார் இலஞ்சம் பெறும்வரை விபத்துக்களைத் தடுக்க முடியாது

வடக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக வாகன விபத்து மரணங்கள் அதிகரித்திருப்பது வேதனை தருவதாகும்.

மரங்களில் மறைந்து நின்றும் இருட்டுகளில் ஒளிந்து நின்றும் வாகனங்களை இடைமறித்துச் சோதனை நடத்துகின்ற பொலிஸாரின் பணி இலக்கை எட்டவில்லை என்பது இதிலிருந்து உறுதியாகிறது.

ஆம், சாலைகளில் பயணிக்கின்ற வாகனங்களை இடைமறித்து சோதனை நடத்துவதன் மூலம் இனங்காணப்படும் குற்றங்களுக்கு உரிய தண்டனை விதிக்கின்றபோது அல்லது சம்பந்தப்பட்ட வாகனச்சாரதிகளை நீதிமன்றில் நிறுத்தும்போது, போக்குவரத்தை ஒழுங்குபடுத்த முடியும்.

மாறாக, மறைந்து நின்றும் இருட்டில் ஒளிந்திருந்தும் வாகனங்களை இடைமறிப்பதற்குள் பொலிஸாரிடம் உள்நோக்கம் உண்டென்பது தெளிவாகிறது.

ஆம், இலஞ்சம் பெறுகின்ற நோக்கில் வாகனச் சோதனை நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொள்வார்களாயின், வெள்ளைக் கோட்டில் வைத்து பாதசாரிகளை அடித்துக் கொலை செய்கின்ற அவலிலேயே சாரதிகள் இருப்பர்.

எனவே இதுவிடயத்தில் அரசாங்கமும் பொலிஸ் அதிகாரிகளும் அதிதீவிர கவனம் செலுத்தி இலஞ்சம் பெறுகின்ற பொலிஸாரை இனங்கண்டு அவர்களைக் கைது செய்து அவர்களின் பதவியையும் வெறுதாக்க வேண்டும். அப்போதுதான் வாகன விபத்துக்களையும் விபத்து மரணங்களையும் தடுக்க முடியும்.

இதை நாம் கூறும்போது, இலஞ்சம் கொடுப்பதும் ஒருவகையான தண்டனை தானே என நீங்கள் யாரேனும் கேட்கலாம். இங்குதான் ஓர் உண்மையை நாம் புரிந்தாக வேண்டும்.

அதாவது பணம் என்பது இப்போது பெரிய விடயமன்று. எனவே பொலிஸாருக்கு இலஞ்சம் கொடுத்துவிட்டு உரிய தண்டத்தில் இருந்து சர்வசாதாரணமாக விலகிச் செல்லலாம் என்ற நிலைமை வந்துற்றபோது, பொலிஸாருக்கு இலஞ்சம் கொடுத்தால் எல்லாம் சரியாகிவிடும் என்ற மனநிலை சாரதிகளிடமும் வாகன உரிமையாளர்களிடமும் ஏற்பட்டு விடும்.

அந் நிலைமையானது, வீதி விதிகளைப் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை என்ற மனநிலைக்கு சாரதிகளை உட்படுத்தி விடும்.

இதன் விளைவையே அண்மைக்காலத்தில் நம் வடக்கு மாகாணத்தில் அதிகரித்து வருகின்ற விபத்து மரணங்கள் சுட்டி நிற்கின்றன.

ஆக போக்குவரத்துப் பொலிஸார் தமது கடமையை நேர்மையாக மேற்கொள்ளாத வரை விபத்து மரணங்களைத் தடுக்க முடியாது போகும்.

இதற்கும் மேலாக, டிப்பர் உள்ளிட்ட கனரக வாகனங்கள் பயணம் செய்யக்கூடிய நேரங்களை வரையறுத்து அதனை இறுக்கமாக நடைமுறைப்படுத்துவதும் விபத்துக்களைத் தடுப்பதற்கு மிகவும் அவசியமாகிறது.

# கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 60 சதவீத பஸ் சாரதிகள் போதைக்கு அடிமை

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் சாரதிகளில் சுமார் 60 சதவீதமானோர் கடுமையான போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளதாக நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி தொடர்பான விசேட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2025 ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 700 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன் அதில் 2 ஆயிரத்து 700 பேர் உயிரிழந்துள்ளனர்.

அவர்களில் 2 ஆயிரம் பேர் பாதசாரிகள், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் மற்றும் பின்னால் அமர்ந்து பயணிப்பவர்கள் என்றும் உயிரிழந்தவர்களில் 53 சதவீதமானோர் ஆண்கள் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த விபத்துக்களில் சுமார் 50 சதவீதமானவற்றிற்கு சாரதிகளே காரணம் எனத் தெரிய வந்துள்ளது.

அவர்களில் பெரும்பாலானோர் மதுபானம் மற்றும் போதைப்பொருட்களைப் பயன்படுத்துபவர்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

போதைப்பொருள் பயன்படுத்தும் தமது சாரதிகள் குறித்து பஸ் சங்கங்கள் அதிகளவில் தகவல்களை வெளிப்படுத்தியுள்ளதாகவும் அவர்களில் 60 சதவீதமானோர் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளதாகவும் அவர் கூறினார். (ம-7)

### கிளிநொச்சி இரணைமடு

## கனகாம்பிகை தாயாருக்கு நாளை மகா கும்பாபிஷேகம்

கிளிநொச்சி இரணைமடு குளத்தருகே வீற்றிருந்து அருள்பாலிக்கும் கனகாம்பிகை அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழா தைப்பூச நன்நாளான நாளை ஞாயிற்றுக்கிழமை காலை சிறப்புற இடம்பெறவுள்ளது.

அதனைமுன்னிட்டு பூர்வாங்கக் கிரியைகள் கடந்த புதன்கிழமை விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமான நிலையில் இன்று சனிக்கிழமை அதிகாலை 05.00 மணி முதல் மாலை 05.00 மணிவரை அடியவர்கள் தமது திருக்கரங்களால் அம்பிகைக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் எண்ணைக்காப்பு சாற்ற வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகி மஹா பூர்ணாகுதி சமர்ப்பணத்தை தொடர்ந்து பூச நட்சத்திரமும் பௌர்ணமி திதியும் சித்த யோகமும் கூடிய காலை 06.12 மணிமுதல் 10.50 மணிவரையுள்ள மீன லக்கின் சுபமுகூர்த்த நல்வேளையில் 108 அடி நவதள நவகலச நாதன அதி கம்பீர ராஜகோபுர கும்பாபிஷேகமும் பரிவார ராஜகோபுர கும்பாபிஷேகமும் இடம்பெற்று கனகாம்பிகை தாயாருக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (ம-7)

## ஒட்டுசுட்டானில் குடும்பஸ்தர் அடித்துப் படுகொலை

### மைத்துனர் கைது

முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் குடும்பஸ்தர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபராக மைத்துனர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குடும்பத்தைப் பிரிந்து தனிமையில் வசித்து வந்த குறித்த நபர் கடந்த 27ஆம் திகதி இரவு, கடைக்குச்சென்று உணவு வாங்கிக் கொண்டு வீடு நோக்கித் திரும்பிய வேளையில் அவரது தலையின் பின்பகுதியில் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் அதிக இரத்தக்கசிவால் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த கொலைச் சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தீவிர விசாரணைகளின் போது அப்பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய மரணமடைந்தவரின் மச்சான் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைக் குட்படுத்திய போது குறித்த சந்தேக நபர் கொலை செய்ததை பொலிஸ் விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளதால் நேற்று முன்தினம் (29) கைது செய்யப்பட்டுள்ளார்.

மரணமடைந்தவரின் மகளை கொலை செய்வதாக அவர் மிரட்டியதாகக் கூறப்படுவதால் ஏற்பட்ட அச்சத்தின் காரணமாக கோடரி பிடியினால் தலையில் தாக்கியதாக சந்தேக நபர் ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரை முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஒட்டுசுட்டான் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

### பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

## நிவாரணம் வழங்கும் பணி இறுதிக்கட்டத்தில்

டித்வா பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் வழங்கும் பணி இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது.

அண்மையில் ஏற்பட்ட "டித்வா" புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளித்தல் மற்றும் நஷ்டஈடு வழங்கும் நடவடிக்கைகளின் தற்போதைய முன்னேற்றம் குறித்து பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆலோக்க பண்டார நேற்று (30) தெளிவுபடுத்தினார்.

இதன்போது அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நஷ்டஈடு வழங்கும் பணிகள் தற்போது பெருமளவில் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதாக அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

அதற்கமைய அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளைச் சுத்தம் செய்வதற்காக 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்க வேண்டிய 4 இலட்சத்து 34 ஆயிரத்து 375 வீட்டு அலகுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவற்றில் 4 இலட்சத்து 23 ஆயிரத்து 914 வீட்டு அலகுகளுக்கு ஏற்கனவே உரிய நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கி முடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் அனர்த்தத்தால் சேதமடைந்த வீட்டுத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை மீளமைப்பதற்காக 50 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்க ஒரு இலட்சத்து 63 ஆயிரத்து 509 வீட்டு அலகுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவற்றில் ஒரு இலட்சத்து 15 ஆயிரத்து 757 வீட்டு அலகுகளுக்கு அக்கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் ஆலோக்க பண்டார தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு 11

என்.சொக்கன்

அலறிவிட்டது அமெரிக்கா. தங்களுடைய ஜென்ம விரோதியை, இப்படிக் காலடியில் உட்கார வைத்துக் கொண்டு அவர்களால் எப்படி நிம்மதியாக இருக்கமுடியும்?

க்யூபாவில் சோவியத் யூனியன் அப்படி என்னதான் செய்கிறது? இந்தக் கேள்விக்குப் பதில் தேடி, சிஐஏவின் உளவுக் கரங்கள் நீண்டன.

**6. உலகெங்கும் கண்கள்**

மொஸ்கோவிலிருந்த ஒரு சிஐஏ அதிகாரியை, அந்த ரஷ்யர் அணுகினார். "நான் உங்களுக்கு உதவ விரும்புகிறேன்" என்றார்.

"உதவி" என்றால், உளவு அகராதியில் அதற்கு ஒரே அர்த்தம் தான். என்னுடைய நாட்டின் இரகசியங்களை நான் உங்களுக்கு விற்க விரும்புகிறேன், எவ்வளவு தருவீர்கள்?

கேட்டவர் சாதாரண மனிதர் அல்ல. அப்போதைய சோவியத் யூனியன் இராணுவத்தின் உளவுப் பிரிவான GRUவில் முக்கியப் பொறுப்பு வகிக்கும் அதிகாரி. அத்தனை பெரிய மனிதர், அவராகவே முன்வந்து, சிஐஏ ஒற்றராகப் பணியாற்ற சம்மதம் தெரிவிக்கிறார்.


நியாயமாகப் பார்த்தால், சிஐஏ சந்தோஷத்தில் தலை கால் புரியாமல் ஆடியிருக்க வேண்டும். ஒரு தூசு, துரும்புகூட நுழையமுடியாத சோவியத் யூனியன் அரசாங்கத்தின் உள்வட்டத்துக்குள், அவர்களுக்கு ஓர் ஒற்றர் கிடைத்துவிட்டார். இனிமேல், சோவியத் இரகசியங்கள் அத்தனையும் சிஐஏவுக்கு அத்துப் படியாகிவிடும்.

ஆனால், ஒலெக் பென்கொவ்ஸ்கி (Oleg Penkovskiy) என்ற அந்த சோவியத் அதிகாரியை, சிஐஏ சற்றே பயத்தோடுதான் பார்த்தது. "உதவியும் வேண்டாம், ஒரு மண்ணாங்கட்டியும் வேண்டாம், ஆளை விடுங்கள்" என்று ஒரு கும்பிடு போட்டு ஒதுங்கிவிட்டார்கள்.

என்ன ஆச்சு சிஐஏவுக்கு? கம்யூனிஸ்ட் ஆட்சியில் சோவியத் யூனியன் யார் கண்ணிலும் படாத தலைமறைவுப் பிரதேசமாகி விட்டது. உள்ளே என்ன நடக்கிறது என்றே தெரியாதபடி கதவை இறுகச் சாத்திவிட்டு, மும்முரமாக ஏதோ செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய திட்டங்கள் என்ன என்று கண்டறிவதற்காக, அமெரிக்க அரசாங்கம் தலையைப் பிய்த்துக் கொண்டு சுற்றிக்கொண்டிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில், "நான் உங்களுக்கு உதவுகிறேன்" என்று ஒரு பெரிய அதிகாரி முன்வருகிறார். அவரை ஒதுக்கித் தள்ளிவிட்டுத் தலைதெறிக்க ஓடுகிறது சிஐஏ.

ஏன்? அன்றைய காலகட்டத்தில், சிஐஏவுக்கு இணையாக ஓர் உளவுத் துறை இயங்கிக்கொண்டிருந்தது என்றால், அது சோவியத் யூனியனின் கேஜிபி (KGB - Komitet Gosudarstvennoi Bezopasnosti)தான். சொல்லப் போனால்,



பல விடயங்களில் கேஜிபி அதிகாரிகளும் உளவாளிகளும் சிஐஏவைத் தூக்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அமெரிக்கா-சோவியத் யூனியன் இடையிலான பனிப்போர் மிகத் தீவிரமடைந்துகொண்டிருந்த சூழ்நிலை. ஆகவே, இருதரப்பினரும், அடுத்தவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை எப்படியாவது தெரிந்து கொண்டுவிட விரும்பினார்கள்.

இதனால், சிஐஏ தன்னுடைய உளவாளிகள் சிலரை, அதிகாரிகள் என்கிற போர்வையில் மொஸ்கோவுக்கு அனுப்பிவைத்தது. இவர்களுடைய வேலை, உள்ளூரில் சிஐஏ ஏஜென்ட்களாகப் பணிபுரியக்கூடியவர்களைத் தேடிப்பிடிப்பது.

இந்த உளவு அதிகாரிகள், பகல் முழுவதும் அமெரிக்கத் தூதரகத்தில் வேலை பார்த்துவிட்டு, சாயந்தரமானதும் கோட்டை எடுத்து மாட்டிக் கொண்டு கிளம்பிவிடுவார்கள். சோவியத் யூனியனின் உயர்மட்டப் பிரமுகர்கள், அதிகாரிகள் அதிகம் உலவுகிற நிகழ்ச்சிகள், பார்ட்டிகளில் கலந்துகொண்டு, அவர்களில் சிஐஏவுக்கு உதவக்கூடிய ஒற்றர்கள் யாரேனும் கிடைப்பார்களா என்று ஆழம் பார்ப்பார்கள்.

இப்படி சிஐஏ சோவியத் யூனியனுக்குள் தனது ஒற்றர்களைத் தேடிக்கொண்டிருந்த அதே நேரத்தில், இன்னொருபக்கம் கேஜிபி அமெரிக்காவினுள் நன்றாக ஊடுருவியிருந்தது. அங்கே நடக்கிற விடயங்கள் அனைத்தும், அட்சரம் பாக்கியில்லாமல் மொஸ்கோவுக்குச் சென்று சேரத் தொடங்கியிருந்தது.

அதுமட்டுமில்லை. இன்னொரு பக்கமாகவும் அமெரிக்காவைத் தாக்க வேண்டும் என்று நினைத்தது கேஜிபி. உள்ளூரில் அவர்கள் சுறுசுறுப்பாக ஒற்றர்களைத் தேடுகிற சமாசாரம் ஏற்கெனவே கேஜிபிக்குத் தெரிந்திருந்தது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, கொஞ்சம் விளையாடிப்பார்க்கலாம் என்று தீர்மானித்தார்கள்.

இதன்படி, சோவியத் யூனியனின் நம்பிக்கைக்குரிய அதிகாரிகள், மற்றும் பொதுமக்கள் சிலரை, அமெரிக்க ஆதரவாளர்கள்போல் நடிக்கச் செய்தது கேஜிபி. இவர்கள் சிஐஏ அதிகாரிகளை நேரடியாகச் சந்தித்துப் பேசினார்கள், அல்லது எதேச்சையாக அவர்கள் காதில் விழுவதுபோல், சோவியத் அரசாங்கத்தை விமர்சித்துக் கல்லெறிந்தார்கள்.

இதைக் கேட்ட சிஐஏ, அவர்களைத் தங்களது ஒற்றர்களாகத் தத்தெடுத்துக்கொண்டது.

ஒவ்வொருவருக்கும் ஏகப்பட்ட சம்பளம் கொடுத்து, சோவியத் சமாசாரங்களை மோப்பம் பிடிக்க முயன்றார்கள்.

இந்த "ஒற்றர்" களிடமிருந்து, சிஐஏவுக்கு உருப்படியாக எந்தத் தகவல்களும் கிடைக்கவில்லை. போதாக்குறைக்கு, சிஐஏவின் நடவடிக்கைகளைப் பற்றிய அனைத்துத் தகவல்களையும் அவர்கள் கர்ம சிரத்தையாக கேஜிபிக்கு அனுப்பிக்கொண்டிருந்தார்கள்.

சற்றே தாமதமாகத்தான் இந்த உண்மையைப் புரிந்து கொண்டது சிஐஏ. அதற்குள் நிலைமை கைமீறிவிட்டது. இப்போது தங்களைச் சுற்றிலும் இருப்பவர்களில் யாரெல்லாம் நிஜமான அமெரிக்க ஆதரவாளர்கள், யாரெல்லாம் கேஜிபியால் அனுப்பப்பட்ட "டபுள் ஏஜென்ட்" கள் என்று புரியாமல் திகைத்துப் போனார்கள்.

சுருக்கமாகச் சொல்வதென்றால், சிஐஏவைத் துல்லியமாகத் தூண்டில் போட்டுப் பிடித்துவிட்டது கேஜிபி. அதன்பிறகு, ரஷ்யர்கள் யாரைப் பார்த்தாலும் அமெரிக்காவுக்குச் சந்தேகம் பிறக்கத் தொடங்கியிருந்தது.

ஆகவேதான், ஒலெக் பென்கொவ்ஸ்கியைப் பார்த்துவிட்டு, சிஐஏ விலகி ஓடியது. ஒருவேளை இந்த ஆள் கேஜிபியின் உளவாளியாக இருந்து தொலைத்துவிட்டால்? எதற்கு வம்பு?.

ஆனால் அதற்காக, அவர்களால் சோவியத் யூனியனை உளவு பார்க்காமல் இருந்துவிடவும் முடியாது. இந்த நிமிஷத்தில் சோவியத் விஞ்ஞானிகள் அமெரிக்காவைத் தாக்குவதற்காக என்னென்ன நவீன ஆயுதங்களையெல்லாம் தயாரித்துக்கொண்டிருக்கிறார்களோ என்கிற சிந்தனைதான், அவர் களைப் புதுப்புது உளவு வழிகளைத் தேடித் துரத்தியது.

ஆரம்பத்தில், சோவியத் எல்லைக்குள் தன்னுடைய உளவாளிகளை பாராசூட்மூலம் இறக்கிக் கொண்டிருந்தது சிஐஏ. இதில் ஆபத்து அதிகம் என்பதால், பின்னர் ரகசிய கமராக்கள் பொருத்திய பலூன்களை அனுப்பி வைக்கத் தொடங்கினார்கள். இதையும், சோவியத் யூனியன் மோப்பம் பிடித்துவிட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தர் சிலை...

சிலை தொடர்பான வழக்கின் தீர்ப்பு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய இந்த வழக்கின் விசாரணை திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் நிலையில் நேற்று (ஜனவரி 30) வழங்கப்படவிருந்த தீர்ப்பு தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது.

திருகோணமலை நகர சபைக்குச் சொந்தமான காணியில் உரிய அனுமதியின்றி இரவோடிரவாக புத்தர் சிலை ஒன்று அமைக்கப்பட்டதாகக் கூறி அதற்கு எதிராகக் கடந்த காலங்களில் பல்வேறு தரப்பினரால் வழக்குத் தொடரப்பட்டது.

ஏற்கெனவே இந்த விவகாரம் தொடர்பாக நீதிமன்றம் சில இடைக்காலத் தடைகளை விதித்திருந்ததுடன் சட்டவிரோதக் கட்டுமானங்களை அகற்றுமாறும் அறிவுறுத்தியிருந்தது.

வழக்கின் அனைத்து வாதப் பிரதிவாதங்களும் நிறைவடைந்துள்ள நிலையில் இறுதித் தீர்ப்புக்காக அனைவரும் காத்திருந்தனர். எனினும் வழக்கின் மேலதிக விளக்கங்கள் அல்லது நிர்வாகக் காரணங்களுக்காகத் தீர்ப்புத் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என நீதிமன்றம் அறிவித்துள்ளது. (ம-7)

## இராணுவ...

கையளிக்குமாறு இராணுவத்தினரிடம் கோரிக்கை முன்வைத்ததாக பாராளுமன்ற உறுப்பினர் சிறீபவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற வலி.மேற்கு அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுழிபுரத்தில் 30 வருடமாக நிலை கொண்டிருந்த இராணுவ முகாம் அகற்றப்பட்டு அந்தக் காணியின் உரியவர்களான பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தினரிடம் ஒப்படைத்து இருக்கின்றோம்.

சங்கானை கிழக்குப் பகுதியிலும் ஒரு இராணுவ முகாம் அமைந்திருக்கின்றது. அது தனியாரின் காணி. அந்தக் காணியையும் பொதுமக்களிடம் கையளிக்குமாறு நாங்கள் இராணுவத்திடம் கோரி இருந்தோம். அவர்கள் அதனைச் சாதகமாக பரிசீலிப்பதாகக் கூறினார்கள் என்றார். (ம-7,104)

## கல்வி மறு...

துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது தரம் 6 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு சர்சைக்குள்ளாகிய நிலையில் பிற்போடப்பட்டுள்ள பாடத்திட்ட - கல்வி மறுசீரமைப்பு குறித்த சாத்தியப்பாடுகளை ஆராய்ந்து அதனைச் செயற்படுத்துவதற்குப் பொருத்தமான திட்டவரைபை முன்மொழிவதற்காக நிபுணர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரியவினால் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவிலேயே சிறீசற்குணராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி விவகாரங்கள் சபைத் தலைவர் பேராசிரியர் பிரியங்கனி சேனநாயக்க தலைமையில் மேற்படி குழுவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா, தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி விவகாரங்கள் சபையின் முன்னாள் தலைவர் உபாலி மாம்பிட்டிய, முன்னாள் உறுப்பினரும் கொழும்புப் பல்கலைக்கழக சமூக வியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் மொஹமட் மஹீஸ் மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ரஞ்சித் பத்மசிறி ஆகியோர் இந்தக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக்குழுவின் முதலாவது கூட்டம் எதிர்வரும் பெப்ரவரி 03ஆம் திகதி தேசிய கல்வி நிறுவகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-7,33)

## திடீர் பணக்காரர்...

தெரியுமா? லிஸ்ட் தரவா? என பாராளுமன்ற உறுப்பினரும் வலி.மேற்கு அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான சிறீபவானந்தராஜா வட்டுக்கோட்டைப் பொலிஸாரைப் பார்த்துக் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற வலி.மேற்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அவர்கள் எப்படி திடீர் பணக்காரர்கள் ஆனார்கள், பொலிஸார் எவ்வாறு அவர்களுடன் நல்லுறவில் இருக்கின்றனர் என மக்கள் காணொளி ஆதாரத்துடன் எமக்கு தந்துள்ளார்கள்.

திடீரென பணக்காரர்களுக்கு எதிராக நாங்கள் திடீர் நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கின்றோம். சங்கானைப் பிரதேச செயலர் பிரிவிலும் திடீர் பணக்காரர்கள் ஆகியுள்ளார்கள் என எமக்கும் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

எனவே அவ்வாறானவர்கள் குறித்தான தகவல்களை மேலும் எங்களுக்கு வழங்குங்கள். எங்களுக்கு கிடைத்த தகவல்களை நாங்கள் உரிய அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளோம். அவர்கள் அது குறித்து நடவடிக்கை எடுப்பார்கள்.

பொலிஸாருக்கு முகவர்கள் இருக்கின்றனர். நாங்கள் அது குறித்து அவதானித்துக்கொண்டு தான் இருக்கின்றோம் என்றார். (ம-7,104)

## சம்...

கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தமானது நேற்று பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சில் வைத்து கையெழுத்திடப்பட்டுள்ளது.

அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி, சம்பள நிர்ணய சபையின் அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

2026ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும் போது, ஜனாதிபதியினால் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளத்தை 1,750 ரூபாய் வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்போது அடிப்படைச் சம்பளத்தை 1,350 ரூபாயிலிருந்து 1,550 ரூபாவாக 200 ரூபாய் அதிகரிப்பதற்கும், வருகைக்கான கொடுப்பனவாக 200 ரூபாயினை அரசாங்கம் செலுத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டது.

அதற்கமைய, இச்சம்பளத்திற்காக வரவு செலவுத் திட்டத்தில் 5,000 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2026.01.30
சீட்டிழுப்பு இலக்கம் 6090
B 5 8 5 8 1 8
அத சம்பத
திகதி 2026.01.30
B 5 8 1 8
சீட்டிழுப்பு இலக்கம் 0665
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

சுப தவசக
திகதி 2026.01.30
சீட்டிழுப்பு இலக்கம் 298
சிம்மம் 31 56 60
9310

தன நிதானய
திகதி - 2026.01.30
சீட்டிழுப்பு இலக்கம் - 2120
W 17 27 30 37 W
ஜேகொ Double Chance

மெகா பவர்
திகதி 2026.01.30
சீட்டிழுப்பு இலக்கம் 2438
J 01 15 30 53 76
ரூ. 1,000,000/- இலக்கம் 330855
ரூ. 100,000/- இலக்கம் 28186
18 22437

ஜய JAYA
திகதி 2026.01.30
சீட்டிழுப்பு இலக்கம் 0358
Y 5 4 7 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4332
சீட்டிழுப்பு திகதி 30.01.2026
U 21 27 78 79
U

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.01.30
சீட்டிழுப்பு இலக்கம் 1399
மகரம் 22 25 43 49 மகரம்
தேசிய லொத்தர் சபை

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
30.01.2026 வெற்றி வாரம் 0798
X 5 6 6 8 9 8
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,085,325.60
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3064
சீட்டிழுப்பு திகதி 2026.01.30 தினம் வெள்ளிக்கிழமை
07 53 59 73 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 94,161,656.00

சனிதா
திகதி 30.01.2026 வெற்றி வாரம் 5225
08 13 39 57 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,193,019.20
ரூ. 50,000/- பணப்பரிசு

சசிரி
வெற்றி வாரம் 894
சீட்டிழுப்பு திகதி 30.01.2026
வெள்ளிக்கிழமை
16 38 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,797,120.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4776
சீட்டிழுப்பு திகதி 30.01.2026 தினம் வெள்ளிக்கிழமை
32 38 44 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,993,551.60

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 34 04 06 13 36
2240
30.01.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.624,816,946.60

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 2890
சீட்டிழுப்பு திகதி: 2026.01.30
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.84,133,505.60
57 71 73 76 S


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணப்பெண் தேவை

01. நல்லூர், சுண்டிக்குளி, இந்து, 1996, ரேவதி, MBBS, Doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (51633)
02. இளவாலை, இந்து, 1991, கேட்டை, Bsc in civil Engineering மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (47511)
03. மீசாலை, சாவகச்சேரி, இந்து, 1994, மிருகசீரிடம், MBBS, Doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (33190)
04. காரைநகர் - புங்குடுதீவு, 1991, உத்தரம், இந்து, A/L, Netherlands citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (57247)
05. மண்டைதீவு, இந்து, 1992, பூரம், MBBS, Doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (57166)
06. கோப்பாய், இந்து, 1982, சுவாதி, MBBS, Doctor, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (31058)
07. பருத்தித்துறை, இந்து, 1995, சதயம், charted Accountant மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (39676)
08. அல்வாய், இந்து, 1990, ரோகிணி, Charted Accountant மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (42381)
09. கோண்டாவில் - மண்டைதீவு, இந்து, 1989, மூலம், MBBS, Doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (54906)
10. அளவெட்டி, இந்து, 1989, உத்தராடம், MSc in Electrical Engineering, Engineer, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (53552)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். எல்லா விதமான ஜாதியிலும், Unmarried, Divorce என்பன உண்டு.

(C-4911)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
077 803 8193

யாழ் நகரில்

# தமிழ்

தரம் – 10, 11 (குழு வகுப்பு)

தைப்பூசத் திருநாளில்
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

ஆ.பிருந்தாபன் BA, PGDE, NDT

077 255 0807

(6711)

# தேவை

கடைக் கணக்குகள்
Exel pc இல் Audit/ Book Keeping செய்வதற்கு (ஆண்/பெண்) அனுபவம் உள்ளவர்கள் தேவை.

+94 77 25 23155

(2004)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

# மணமகள் தேவை

லண்டன் குடியுரிமை பெற்ற 1981 ம் ஆண்டு பிறந்த A/L பூரண சித்தி பெற்ற மணமகனுக்கு நன்றாக ஆங்கிலம் எழுத, பேச தெரிந்த பெண்ணை எதிர்பார்க்கின்றோம். லண்டனில் வசிக்கும் பெண்ணையும் எதிர்பார்க்கின்றோம். சீதனம் எதிர்பார்க்கப்படும்

077 668 3717

(6681)

# மலிவு விற்பனை

இன்றும் நாளையும் ஒரே விலையில் ஒரு பூங்கன்று வாங்கினால் ஒன்று இலவசம்.

யாழ். சிற்றி பாம், 755, மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்.

075 944 4601

(6706)

# வேலையாட்கள் தேவை

கட்டட நிர்மாண நிறுவனத்திற்கு ( மேசன், கூலியாட்கள் ) தேவை.

தொடர்புகளுக்கு :
070 4211 575

(6710)

# வைத்தியம்

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி | மூலம் | கழுத்து வலி
கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி | Sciatica | Rheumatic Arthritis
நாட்பட்ட சளி | இருதயவலி | வாதம் | வயிற்றுப்புண் | Gastrtis | அல்சர் மிகச்சிறந்த மூலிகை, நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள் | சிக்கின் குனியாவால் ஏற்படும் மூட்டு, தசை, பாத வலிகள்

நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669

(6712)

# மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள BJE XXX தொடர் இலக்கமுடைய HONDA BENLY 125 உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

077 711 5596

(6707)

# வீடு வாடகைக்குத் தேவை

நல்லூர், திருநெல்வேலி, கல்வியங்காடு, அரியாலை போன்ற பிரதேசங்களில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு :
077 291 9079

(6710)

# Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 195/= | Max 3Kg |
| 1Kg கோதுமை மா | - 148/= | Max 5Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 249/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 260/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 225/= | |
| 1Kg சர்க்கரை | - 235/= | |
| 1Kg றவை | - 282/= | |
| 10Kg விஜிதா நாடு அரிசி | - 2670/= | Max 01 |
| 1Kg கடலை | - 352/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 255/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | |
| 01 அங்கர் யோக்கட் | - 40/= | ~~90/=~~ |
| 01 டசின் தீப்பெட்டி | - 160/= | ~~240/=~~ |




தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்.

(2003)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30

# தென்னிந்திய யாத்திரை

தமிழ்நாடு, ஆந்திரா, பாண்டிச்சேரியுடனான யாத்திரை
யாத்திரிகர் : 10 | நாட்கள் : 12

Amount
250,000

**ஆரம்பத் திகதி : 01.03.2026**

தரிசிக்கும் இடங்கள் : உச்சிப்பிள்ளையார், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம், பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காளகஸ்தி, திருவெண்ணாமலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவெண்ணைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷாணம்,சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழபகவான், செவ்வாய், ராகு, கேது, சனி பகவான், திருநள்ளாறு, நளன்குளத்தின் நீராடல், தோணியப்பர், மனக்குழ விநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 45 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரினாபீச், பாண்டிச்சேரி பீச், MGR ஜெயலலிதா,அண்ணா சமாதிகளையும் அப்துல் கலாமின் மணிமண்டபமும், பார்க்கலாம்.

சென்னையில் ஒரு நாள் Shopping

தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை இருவழி விமான ரிக்கட், மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி இவை அனைத்தும் எமது சேவை.

- யாழ்ப்பாணம் – கொழும்பு
  கொழும்பு – யாழ்ப்பாணம் வாகன சேவை உண்டு
- இந்த யாத்திரை ஒவ்வொரு மாதமும் இடம்பெறும்.

(1997)

தொடர்புகளுக்கு: கலாநிதி T.றீரெங்கநாதன் மகன் : ராஜன்
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு -11.
srianganathan1944@gmail.com, sriranganathan2601@gmail.com
Tel : 077 736 2154


# மரண அறிவித்தல்

## சின்னட்டி தெய்வேந்திரன்

(ஓய்வுநிலை விசாரணை உத்தியோகத்தர் – இ.போ.ச வடக்கு)



தோற்றம் : 17.08.1949 மறைவு : 29.01.2026

இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னட்டி தெய்வேந்திரன் அவர்கள் கடந்த 29.01.2026 வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னட்டி - கமலம் தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான வெள்ளையன் - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பகீசன் (பிரதேச அபிவிருத்தி வங்கி உத்தியோகத்தர்) மற்றும் பார்த்தீபன் (லண்டன்), பாமினி (ஆசிரியை - யா/பொலிகண்டி இ.த.க.பாடசாலை), பகீரதன் (சுவிஸ்), தினேஸ் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் தர்மரத்தினம், குணசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயராணி (லண்டன்), வசிகரன் (இ.போ.ச பருத்தித்துறை சாலை உத்தியோகத்தர்), கிரியா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் இராஜேந்திரம் (சுவிஸ்), இராஜரட்ணம் (சுவிஸ்), ரவீந்திரன் (சுவிஸ்), இரத்தினேஸ்வரி, இராஜேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கேதாரணி (கொழும்பு பல்கலைக்கழகம்), சாத்வீகன் (2024 - உயர்தர மாணவன் உடுப்பிட்டி AMC), தியானா (U.K), அனுஸ் (U.K) ஆதீசன் (சுவிஸ்), ஆதீரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.02.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

"தாரணி"
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

(6708)

தகவல் :
குடும்பத்தினர்
077 997 9659

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org